

# கோகுலம்

குழந்தைகள் பத்திரிகை
மாதம் இருமுறை
7-1-1973
30 காசு




Parry's
பாரிமுனை
மழை வந்தால்
துள்ளாட்டம்!–பாரி மிட்டாய் தந்தால் கொண்டாட்டம்
திகட்டாத வாழ்வுக்கு சுவையான
பாரி Parry's மிட்டாய்கள்




# கோகுலம்

உயிர்களிடத்து அன்பு வேண்டும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேண்டும்


— பாரதியார்

மலர் 1 இதழ் 19

பரிதாபி, மார்கழி 24 ○ ஜனவரி 7, 1973

அட்டையில்: பூர்ணகும்பம் ஏந்திய பெண்

வண்ணப் படம்: ராமலிங்கம்

# ராஜாஜித் தாத்தா



**ரா**ஜாஜித் தாத்தா எப்போதும் நம்மிடையே சிரஞ்சீவியாக இருந்து நமக்கெல்லாம் வழிகாட்டிக் கொண்டிருப்பார் என்று ஆசைப்பட்டோம். ஏமாறிப் போய் நிற்கிறோம்.


நம்முடைய நல்வாழ்வும் நாட்டின் நலனுமே ராஜாஜித் தாத்தாவின் பேச்சாகவும் மூச்சாகவும் இருந்தது. அந்த அன்புத் தாத்தா அமரராகிவிட்டார்.

ஒரு மகத்தான காலத்தைச் சகாப்தம் என்று கூறுவார்கள். ராஜாஜித் தாத்தாவுடன் ஒரு மகத்தான சகாப்தம் முடிவடைந்து விட்டது. அவரைப்போல் எவரும் இருந்ததில்லை. இனி இருக்கப் போவதுமில்லை.

ராஜாஜித் தாத்தா மறைந்தாலும் அவர் அறிவுரைகள் மறையவில்லை. பெரிய பெரிய விஷயங்களையும் குட்டிக் குட்டிக் கதைகள் மூலம் சுலபமாகச் சிக்கலெடுத்துக் கொடுத்த அவரது பொன்னெழுத்துக்கள் புத்தொளி வீசிக் கொண்டிருக்கின்றன. மகா மகாப் பண்டிதர்களெல்லாம் திரும்பத் திரும்பப் படித்து மகிழும் புராணங்களான இராமாயணத்தையும் மகாபாரதத்தையும் மற்ற பல உபதேசங்களையும் உங்களுக்கெல்லாம் தேன்பாகு போல் இனிக்க இனிக்க எளிமையிலும் எளிமையாய் எழுதிக் கொடுத்து விட்டுப் போன தாத்தாவை நினைத்து நீங்கள் எல்லாம் கண்ணீர் சோர நிற்கிறீர்கள்.

குழந்தைகளே, உங்கள் கண்ணீர் உலரட்டும். நம் ராஜாஜித் தாத்தா எங்கும் போய்விடவில்லை. அவரைத்தான் நம் இதயத்திலேயே இருத்திக் கொண்டுவிட்டோமே. அவர் சொற்படி நடப்பதே நாம் அவருக்குச் செலுத்தும் அஞ்சலியாகும்.

சதாசிவம்



# ஆத்திசூடி

ராஜாஜி



## நெற் பயிர் விளை

நெல் விளைவிப்பாயாக. முக்கியமான பயிராகிய நெல் ஒன்றைச் சொன்னதினால் ஆகாரத்துக்கு வேண்டிய மற்ற தானிய வகைகளையும் சொன்னதாகவே வைத்துக்கொள்ள வேண்டும். உழுது பயிர் செய்து உணவுப் பண்டங்களை உண்டாக்குதல் கடமையாகும். உழுது பயிர் செய்தல் மேன்மையான தொழில்.

## நேர்பட ஒழுகு

**நேர்பட** — கோணாமல் அதாவது நெறி தவறாமல்

**ஒழுகு** — நடந்துகொள்.

பொய் பேசுதல், மோசம் செய்தல், பிறருக்கு அநியாயம் செய்தல் இவை நெறி தவறாகும். நெறி தவறாமல் நேர் வழியில் நடப்பது கடமையாகும்.

## நைவினை நணுகேல்

**நைத்தல்** — அழித்தல்

சில காரியங்கள் முதலில் இன்பமோ லாபமோ தருவது போல் இருக்கும். பிறகு உன்னை அழித்துவிடும். அத்தகைய காரியங்களைத் தொடங்காதே. சூதாட்டம், சிற்றின்பம் தேடுதல், கள் உண்ணுதல் முதலியவை இதனுள் அடங்கும்.

## நொய்ய உரையேல்

**நொய்ய** — பயனற்ற வெறும் பேச்சுக்கள்

**உரையேல்** — பேசாதே

பேசும்போது பொருளும் நற்பயனும் பொருந்திய பேச்சுக்களையே பேச வேண்டும்.




### காளிங்கன்

பேராற்றல் படைத்தவரும், விந்தையின் திருக்குமாரரும் ஆகிய கருட பகவான் சர்ப்பங்களைக் கொன்று தின்று கொண்டிருந்தார். அப்போது வலிமை மிகுந்த காளிங்கன் என்ற நாகராஜன் தனது வலிமையால் மதங் கொண்டு கருட பகவானை எதிர்த்து அவர்மீது கொடிய நஞ்சைச் சொரிந்து, படங்களை விரித்துப் போர் புரிந்தான். கருட பகவான் ஊழிக் காற்றைப் போல் சிறகுகளால் காற்றை வீசி மண்ணும் விண்ணும், கண்டவர்கள் கண்ணும் நடுங்கக் காளிங்கனைச் சின்னாபின்னமாக அடித்தார்.

காளியன் நடுநடுங்கித் தன் மனைவி மக்களுடன் ஓடி, யமுனா நதியின் கிளை நதியாகிய ஒரு மடுவில் போய் ஒளிந்து கொண்டான்.

முன்னொரு காலத்தில் இம்மடுவின் கரையில் சௌபரி என்ற முனீந்திரர் தவம் செய்து கொண்டிருந்தார். அங்கு கருட பகவான் அடிக்கடி வந்து மடுவில் வாழும் மீன் முதலிய நீர்வாழ் பிராணிகளைக் கொன்று தின்று இடர்ப்படுத்தினார். கருணாமூர்த்தியாகிய சௌபரி முனிவரர் உயிர்களின் மீது இரக்கம் கொண்டு, ''கருடனே! இனி இந்த மடுவின் அருகில் வந்தால் உன் தலை வெடித்து மாளக் கடவாயாக'' என்று சாபமிட்டார். அதனால் கருடர் அம்மடுவின் பக்கம் போவதில்லை. இந்த இரகசியத்தை அறிந்த காளிங்கன் அம்மடுவில் புகுந்து கருட பயம் இன்றி இனிது வாழ்ந்து வந்தான்.

காளிங்கனுடைய கொடிய விஷம் அந்த நீரில் பரந்து நின்றது. அதன் காற்று வீசிய பகுதிகள் யாவும் கரிந்து எரிந்தன. அம்மடுவின் அருகில் பறந்து வந்த பறவைகள் யாவும் மடிந்தன. மரங்கள் புல் பூண்டு யாவும் சாம்பராயின. முன்னொரு காலத்தில் கருட பகவான் அமுதம் கொணர்ந்தபோது அதன் துளி சிதறித் தன்மீது விழுந்த காரணத்தால் ஒரு கடம்ப மரம் மட்டும் தழைத்திருந்தது. அநுமானால் அசோக வனம் முற்றிலும் அழிந்தபோது சீதாப் பிராட்டியார் இருந்த ஓர் அசோக மரம் மட்டும் தழைத்திருந்ததுபோல் அக்கடம்ப மரம் மட்டும் விஷ வேகத்தால் அழியாது நின்றது.

ஒரு நாள் பலராமர் மட்டும் ஆயர் பாடியில் தங்கியிருந்தார். கோபால கிருஷ்ணர் தமது தோழர்களாகிய ஆயச் சிறார்களுடன் பசுக் குலங்களை மேய்த்துக் கொண்டு காளிங்கன் வாழும் மடுவுக்குச் சென்றார். நீர் விடாயால் அம்மடு நீரை உண்ட கோபாலச் சிறுவர்களும் பசுக் குலங்களும் மரண மூர்ச்சையடைந்தார்கள்.

கருணைக்கடலாகிய கண்ணபிரான் தமது கடைக்கண் பார்வையாகிய அமுதத்தால் அவர்களை உய்வித்தருளினார்.

கோபால குமாரர்கள் எழுந்து, பகவானைப் பணிந்து, ''கிருஷ்ணா! உன் அருள் வெள்ளத்தால் நாங்கள் இறந்து பிழைத்தோம், அப்பனே! உன் கருணைக்கு உரியவர்களாகிய எமக்கு என்றும் ஒரு குறைவும் இல்லை. நீ அடியார்க்கு அருளும் முடியா முதல்வன்; பக்தவத்சலன், பரம கருணாமூர்த்தி. உன் பாதமே எமக்குத் துணை'' என்று கூறித் துதி செய்தார்கள்.

### காளிங்கன்மீது களிநடம்

ஆயர் குலம் தழைக்க வந்த மாய கோபால மூர்த்தி, அம்மடுவில் வாழும் காளியனை அகற்றி, விஷ பயத்தைப் போக்கி, அம்மடுவின் தீர்த்தம் புனிதமாக விளங்கும் பொருட்டும், அவ்



வனம் செழித்திருக்கவும் செய்யத் திருவுளம் பற்றினார்.

விஷ வேகத்தால் கொதித்துக் கொண்டிருக்கின்ற அம்மடுவின் அருகில் தழைத்திருக்கின்ற கடம்ப மரத்தின் மீது ஏறி மடுவினுள் குபீர் என்று குதித்தார்.

கோமுகாசுரன் வேதங்களைக் கவர்ந்து கடலில் ஒளித்தபோது மச்சாவதாரம் எடுத்துக் கடலைக் கலக்கியது போல், மடுவில் பாய்ந்து நீந்தி விளையாடினார்.

காளிங்கன் இதனைக் கண்டு வடவாமுகாக்கினியைப் போல் சீறியெழுந்தான். தேவரும் நெருங்காத இம்மடுவில் இந்தச் சிறுவன் நீந்தி விளையாடுகின்றானே? என்ன அகங்காரம்? இவன் அறியாப் பாலகன் என்று கருதி விஷ நெருப்பைக் கக்கினான். அதனால் மடு நீர் முழுதும் கொதித்தது. விஷப் புகை எட்டுத் திசைகளிலும் பரந்தது. நீரை அல்லோலகல்லோலப்படுத்தும் பகவானைப் பற்களால் கடித்தான். நச்சுப் பற்களால் கீறினான். மிகப் பெரிய சீற்றம் கொண்டு கண்ணனுடைய திருமேனியைச் சுற்றிக் கொண்டான். எம்பெருமான் அரவுக்கு அடங்கிய வரைப்போல் அசைவற்றிருந்தார்.

கண்ணனுக்கு உற்ற துயரைக் கண்டு கரையில் நின்றிருந்த ஆயர்கள் 'ஓ' என்று அழுது புலம்பினார்கள். ''ஏ நந்த நந்தனா! யசோதையின் திருமகனே! அந்தோ! இந்த அவல நிலையைக் கண்ட எங்கள் கண்களைப் பிடுங்கி எறிவோம். எங்கள் இதயம் வெடித்துப்போகும். ஐயனே! உன்னைப் பிரிந்து நாங்கள் ஒரு கணமும் வாழ்கில்லோம்'' என்று வாய் விட்டு அழுதார்கள்.

பசுக்களும் கன்றுகளும் கண்ணனைக் கண்டு கண்ணீர் சொரிந்து அழுதன. 'அம்மா! அம்மா!' என்று அலறின.

அப்போது பூதலமும் மீதலமும் நடுங்கின. எரிகொள்ளிகள் வீழ்ந்தன. மண்மாரி பொழிந்தது. ஆயர்பாடியில் வாழ்ந்த ஆயர்களுக்கு இடக் கண்களும் இடப் புயங்களும் துடித்தன. கோபிகையர்களுக்கு வலக் கண்களும் வலத் தோளும் துடித்தன. எல்லோரும்

தமக்கு நேர்ந்த அபசகுனம் கண்டு, கண்ணபிரானுக்கு என்ன இடர் நேர்ந்ததோ என்று மதியும் கதியும் கலங்கிப் பலராமனுடன் புறப்பட்டார்கள். கண்ணனைத் தேடினார்கள். அவருடைய அடிச்சுவட்டை நாடினார்கள். உள்ளம் வாடினார்கள்.

மடுவின் கரையை அடைந்து காளியனால் கட்டுண்டிருக்கும் பரந்தாமனைப் பார்த்து, உடல் வேர்த்து ''அந்தோ!'' என்று அலறி அழுதார்கள்.

யசோதை, ''என் இளஞ் செல்வமே! உனக்கு இத்துயரம் நேர்ந்ததே. ஒரு மாதக் குழந்தையாக இருந்த நீ பூதனை தந்த விஷ வேதனையை மாற்றினாயே! இப்போது காளிங்கனால் கட்டுப் பட்டு மட்டுப்படாத துயரத்தில் கிடக்கின்றாயே! உன்னைக் கண்டு நாங்கள் அழுகின்றோமே? எங்கள் அழுகுரல் உன் செவியில் விழவில்லையா? அப்பனே! உன்னைப் பிரிந்து நாங்கள் வாழ மாட்டோம். இதோ இம்மடுவில் பாய்ந்து மாய்ந்து போவோம்'' என்று கூறி அழுதாள்.

யசோதை முதலியோர் மடுவில் விழ முயன்றார்கள். அப்போது பலதேவர் அவர்களைத் தடுத்தார். ''நீங்கள் வருந்த வேண்டாம். அரிகிருஷ்ணனுடைய பெருமையை நீங்கள் அறிந்திரில்லை. கண்ணன் ஒரு கணத்தில் நாகராஜனை அடக்குவான். கண்ணனுடைய கடைப் புருவம் அசைந்தால் கனக மேரு பொடிபடுமே? நீவிர் யாரும் மடுவில் விழாதீர்கள்'' என்று கூறிச் சமாதானப்படுத்தினார்.

''கிருஷ்ணா, கிருஷ்ணா!'' என்று எல்லோரும் தமது திருநாமத்தைக் கூறி அழுது புலம்புவதைக் கேட்ட பகவான் தமது திருமேனியைப் பருமனாகுமாறு செய்து வளர்ந்தார். காளியன் உடம்பு நொந்தது. பகவான் காளியனைப் பிடித்துப் பலமுறை அங்கும் இங்கும் எறிந்தார். அவன் துன்புற்றுப் பண மகுடங்களை விரித்து வெகுண்டு பார்த்தான்.

நந்த நந்தனன் அவனுடைய பண மகுடத்தின் மீது தமது திருவடியை ஊன்றி, வாலைப் பற்றி, தளாங்கு தள தள; தஜ்ஜம் தகஜம்; தளத்தனந்தன; திமித்திமித்திமி; தடுட்டு டுட்டுடு; தரித் தரித்திரி என்ற தாள வரிசையுடன் நடனம் ஆடினார். அந்தக் கானகத்தில் அந்த நடனத்துக்கு ஏற்பப் பறவைகள் ஒலி செய்தன. வானத்தில் தேவர்களும், தேவ மாதர்களும் கண்டு கைகூப்பித் தொழுதார்கள்.

காளியனுடைய கண்கள் பிதுங்கின. அவன் அளவற்ற துயரம் அடைந்தான். ''என் விஷ வேகத்தைத் தடுத்து என் மீது நடனம் ஆடும் இவன் மனிதனன்று; என்னைப் புனிதனாக்க வந்த புருஷோத்தமனே'' என்று எண்ணி அடங்கி ஒடுங்கி மூர்ச்சித்தான்.

அவனுடைய மனைவியர்களான நாக மாதர்கள் ஐயனுடைய திருவடிகளைத் தொழுது, அழுது, ''அண்ணலே! எங்களுக்கு மாங்கல்யப் பிச்சை தந்து, எமது கணவனைக் காத்தருளும்'' என்று முறையிட்டார்கள்.

வேதங்களும் காணாத பாதங்களைப் பெற்ற காளிங்கன் பரவசமடைந்தான். பரமனைப் பணிந்து, வினை தணிந்து, ஐயன் திருவடியை யணிந்து துதி செய்தான்.

கண்ணபிரான் அவன் மீது கருணை புரிந்து, ''காளியனே! என் திருவடி உன் பணமகுடத்தில் பட்ட அறிகுறியால், இனி உன்னைக் கருடன் இடர் புரிய மாட்டான். இம்மடு நீர் மக்களுக்குப் பயன் பட வேண்டும். நீ உன் குடும்பத்துடன் கடலை அடைந்து வாழ்க!'' என்று கூறி அருள் புரிந்தார்.

காளிங்கன் அண்ணலின் அடிமலரின் பரிசத்தால் பாவமும் நோயும் அகன்று நல்லுடம்பு பெற்றான். மகிழ்ச்சியுற்றான். குடும்பத்துடன் கடலையடுத்து வாழ்ந்தான்.

கண்ணபிரான் கரை யேறினார். யசோதை மகனை வாரி எடுத்து அணைத்துக்கொண்டாள். கண்ணீரினால் முழுக வைத்தாள். ''என் செல்வமே! எங்கள் குலம் தழைக்க வந்த கோமானே!'' என்று அழைத்து அகமகிழ்ந்தாள். ஆண்டவன் அடிமலர் தோய்ந்ததால் அன்று முதல் அம்மடு புனிதமான தீர்த்தமாக விளங்கியது. அதில் முழுகியவர்கள் சகல வினைகளினின்றும் விடுதலை யடைந்தார்கள். அவ்வனம் தழைத்தது.

அன்று எல்லோரும் மடுவின் கரையில் தங்கினார்கள். அன்றிரவு எல்லோரும் அயர்ந்து உறங்கினார்கள். நடுநிசியில் காட்டுத் தீ ஊழித் தீயைப் போல் வளர்ந்து சூழ்ந்தது. தூங்கிக் கொண்டிருந்த எல்லோரும் எழுந்து தம்மைச் சூழ்ந்து வரும் காட்டுத் தீயைக் கண்டு கதியும் மதியும் கலங்கி, ''கிருஷ்ணா! கிருஷ்ணா!'' என்று தாமோதரனைத் தஞ்சம் புகுந்தார்கள்.

வாசுதேவன் தமது விசுவ ரூபத்தால் வாழைப் பழத்தை உண்பது போல், காட்டுத் தீயை ஒரு கணத்தில் உண்டு விட்டார். கண்ணன் கருணையால் கானகம் குளிர்ந்தது. ஆயர்களும் நேயர்களும் மகிழ்ந்தார்கள். கதிரவன் உதயமானான். எல்லோரும் மடுவில் நீராடிக் கண்ணனுடன் ஆயர்பாடியைச் சேர்ந்தார்கள்.

(தொடரும்)



# நிலா நிலா வருகிறேன்!

நிலா நிலா வருகிறேன்
நீண்ட தூரம் வருகிறேன்
உன்னைப்போல நானுமே
உயர வானில் பறந்திட
ராக்கெட் மீது ஏறியே
உயரப் பறந்து வருகிறேன்

நிலா நிலா வருகிறேன்
நீண்ட தூரம் வருகிறேன்
உன்னைப் பார்க்க நானுமே
ராக்கெட் மீது ஏறியே
உலகைச் சுற்றி வருகிறேன்;
உன்னைச் சுற்றி வருகிறேன்

நிலா நிலா வருகிறேன்
நீண்ட தூரம் வருகிறேன்
விண்ணில் பறக்கும் போதிலே
வெளிச்சம்போட்டுக் காட்டிடும்
மண்ணில் கொஞ்சம் நானுமே
மகிழ்ந்து ஆட வருகிறேன்

நிலா நிலா வருகிறேன்
நீண்ட தூரம் வருகிறேன்
வட்ட வடிவில் நீயுமே
வானில் காட்சி தருகிறாய்
கிட்ட வந்து பார்க்கிலோ
மேடு பள்ளம் கொண்டுளாய்

நிலா நிலா வருகிறேன்
நீண்ட தூரம் வருகிறேன்
படிக்க வசதி இல்லையே
குடிக்க நீரும் இல்லையே
ஓடியாட நண்பர்கள்
யாரும் இங்கு இல்லையே

நிலா நிலா போகிறேன்
நிலத்தை நாடிப் போகிறேன்
சோறு ஊட்டும் போதிலே
காட்டி மகிழ அன்னைக்கும்
வேறு நிலவு இல்லையே
இங்கிருந்தால் தொல்லையே

நிலா நிலா போகிறேன்
நிலத்தை நாடிப் போகிறேன்



க. ப. அனந்தகிருட்டிணன்

# புதிய பிறவி

கார்த்திகேயன்



கிருஷ்ணன் அந்த வருடம் கோடை விடுமுறையைக் கழிக்க அவன் ஊருக்குச் சென்றிருந்தான். அங்கு அவன் அத்தை வசித்து வந்தாள். கிருஷ்ணன் பிறப்பதற்கு முன்பே அவன் பெற்றோர்கள் வேலைக்காகப் பட்டணம் வந்து விட்டார்கள். அவ்வூரிலுள்ள அவர்கள் வீட்டில்தான் அத்தை இருந்து வந்தாள். அவர்களுடைய நிலபுலன்களை அவள்தான் கவனித்து வந்தாள். எப்போதாவது ஒரு முறை அவர்கள் ஊருக்கு வந்து போவார்கள்.

கிருஷ்ணன் எட்டாம் வகுப்பு படித்து வந்தான். அவனுக்கு நினைவு தெரிந்து அந்த வருடம்தான் ஊருக்கு வந்திருக்கிறான். அந்த ஊரிலும் பல அற்புத நிகழ்ச்சிகள் நடைபெற்று வந்தன. அவற்றில் ஒன்றுதான் **சிறுவர் சேவைக் குழு** என்ற அமைப்பு.


ஒவ்வொரு தெருவிலும் உள்ள பள்ளிச் சிறுவர்கள் ஒன்று சேர்ந்து தங்களுக்கென ஒரு குழு அமைத்துக்கொண்டு சேவை புரிந்து வந்தார்கள். மொத்தக் குழுக்களுக்கும் ஒரு தலைவர் உண்டு. அவர் அவ்வப்போது வேண்டிய ஆலோசனைகளைக் கூறி அவர்களை ஊக்கப் படுத்தி வந்தார். ஊரிலுள்ளவர்கள் அனைவரும் ஒருங்கே அந்தக் குழுக்களின் சேவையைப் பாராட்டி அவர்களுக்குத் தேவையான ஆதரவையும் நல்கி வந்தனர்.


தெருக்களில் குப்பைகள் சேர விடாமலும், சிறு குழந்தைகள் அசுத்தம்செய்யாமலும் அவர்கள் பார்த்துக் கொண்டனர். குப்பைகளை அவற்றுக்கென வைக்கப்பட்டிருந்த தொட்டிகளில் கொண்டு போய்க் கொட்டச் செய்தனர். அடிக்கடி சுகாதார அதிகாரிகளை அழைத்து வந்து தெருவின் இரு ஓரங்களிலும் மருந்து தூவச் செய்தனர். மாலை நேரங்களில் ஊருக்கு வெளியே இருக்கும் தோப்பிலே திறந்த வெளியில் விளையாடவும் தேகப் பயிற்சி செய்யவும் சிறுவர்களைப் பழக்கினர்.

கிருஷ்ணனுக்கு அவர்களைப் பிடிக்கவில்லை. அதற்குக் காரணம் அவன் சைக்கிளை எடுத்துக் கொண்டு தெருவில் புறப்பட்டுவிட்டால் தலைதெறிக்கும் வேகத்தில் போவான். அவன் அவ்வாறு செல்வது கூடாது என்று அவர்கள் அறிவுறுத்தினர். பிறருக்கு ஆபத்து ஏற்படுவது ஒருபுறமிருக்க அவனுக்கே விபத்து ஏற்பட்டு அவன் கைகால் முறிந்துவிட்டால் என்ன செய்வது?

இப்படி அவர்கள் அறிவுரை கூறுவது தான் அவனுக்குக் கோபத்தை உண்டாக்கியது. அவர்களுடன் சண்டைக்குப் போனான். அவர்களோ அவனுடைய








திட்டுக்களையும் கோபத்தையும் புன்சிரிப்புடன் ஏற்றுக் கொண்டார்கள்.

அன்றையதினம் கிருஷ்ணன் தந்தைக்கு ஒரு கடிதம் எழுதினான். அதைத் தபாலில் சேர்க்க வேண்டும்



எனப் புறப்பட்டபோது, தபால் எடுப்பதற்கான நேரம் நெருங்கி விட்டதைக் கண்டான். வழக்கம் போல் சைக்கிளை எடுத்துக் கொண்டு வாயுவேகமாய்ப் பறந்தான்.

கடைத் தெருவிலே அவன் திரும்புவதற்கும், கண்ணாடி வண்டியிலே மிட்டாய்களையும் இனிப்புக்களையும் வைத்துக் கொண்டு விற்கும் லாலா வருவதற்கும் சரியாக இருந்தது. கண் மூடித் திறப்பதற்குள் கிருஷ்ணனுடைய சைக்கிள் அந்த வண்டியின் மீது மோதி விட்டது. கிருஷ்ணன் ஒருபுறம் தூக்கி எறியப்பட்டு விழுந்தான். லாலாவும் சைக்கிள் சக்கரத்தால் மோதப்பட்டு விழுந்துவிட்டார். தெருவிலே சென்றவர்கள் கூட்டமாகக் கூடிவிட்டார்கள். கண்மூடித்தனமாக வந்து மோதியது கிருஷ்ணனுடைய தவறு என்பதால் அவனைப் பிடித்துக் கொண்டார்கள்.

நல்லவேளையாகக் கிருஷ்ணன் இருந்த தெருவைச் சேர்ந்த சிறுவர்கள் இரண்டு மூன்று பேர் அங்கே வந்து சேர்ந்தனர். நடந்ததை அறிந்ததும் அவர்கள் கூட்டத்தினரின் கோபத்திலிருந்து கிருஷ்ணனைக் காப்பாற்ற முன்வந்தனர். ஒருவன் கிருஷ்ணனிடமிருந்து தபாலை வாங்கித் தபாலாபீசில் சேர்க்கச் சென்றான். மற்றொருவன் லாலாவிடம் சென்று அவரைச் சமாதானப்படுத்தி, அழைத்துச் சென்றான். இன்னொருவன் கிருஷ்ணனிடம் வந்து அவன் முழங்காலிலே ஏற்பட்டிருந்த இரத்தக் காயத்தைத் துடைத்துத் துணியால் கட்டி, அவனைச் சைக்கிளின் பின் ஸீட்டிலே உட்கார வைத்துச் சைக்கிளைத் தள்ளிக் கொண்டு வீடு வரை அழைத்து வந்தான்.

அவர்களுடைய செய்கை கிருஷ்ணனுடைய நெஞ்சத்தை வெகுவாக நெகிழச் செய்துவிட்டது. அவர்கள் செய்து வரும் உண்மையான சேவைகளை உணர்ந்தான்.

அன்று மாலை ஆலய மண்டபத்திலே சிறுவர்களுடைய குழு கூடுவதை அறிந்து கிருஷ்ணன் அங்கே சென்றான். அவனைக் கண்டதும் ஒவ்வொருவரும் வந்து அவனிடம் அன்புடன் முழங்கால் காயத்தைப் பற்றி விசாரித்தனர்.

''நண்பர்களே! உங்களிடம் வெறுப்புக் கொண்டதற்காக என்னை மன்னித்து விடுங்கள். உங்கள் உண்மையான சேவைகளை நான் உணர்ந்து கொண்டேன். நானும் உங்கள் சேவைகளில் பங்கு கொள்ள விரும்புகிறேன். எனக்கும் ஏதாவது பணிகளைக் கொடுங்கள்'' என்றான் கிருஷ்ணன் நெஞ்சம் தழுதழுக்க. □

# தெரியுமா?

365. இந்தச் சாதனைகளை முதலில் செய்தவர் யார்? 1. கப்பலில் உலகைச் சுற்றியவர்; 2. விண்வெளியில் ராக்கெட்டில் பறந்தவர்; 3. அட்லாண்டிக் கடலைக் கடந்தவர்; 4. வட அமெரிக்காவுக்குக் கடல் மூலம் ஒரு பக்கமிருந்து மறு பக்கத்துக்குச் சென்றவர்.

366. புகழ்பெற்ற இவர்களுடைய தாய்நாடு எது? 1. டேவிட் லிவிங்ஸ்டன்; 2. ஸர் எட்மண்ட் ஹில்லரி; 3. கிறிஸ்டபர் கொலம்பஸ்.

367. இங்கிலாந்திலுள்ள மிக உயரமான மலையின் பெயர் என்ன?

368. ஸ்விட்ஜர்லாந்தில் எல்லைகளாக அமைந்துள்ள நான்கு நாடுகள் எவை?

369. மேற்கு ஜெர்மனியின் தலைநகர் எது?

370. ரஷ்யாவையும் உள்ளிட்ட ஐரோப்பாவிலுள்ள மிக உயரமான மலையின் பெயர் என்ன?

371. விக்டோரியா நீர்வீழ்ச்சி எந்த நதியினால் ஏற்படுகிறது?

372. செங்கடலையும் மத்தியதரைக் கடலையும் இணைக்கும் கால்வாயின் பெயர் என்ன?

373. ஆப்பிரிக்காவின் மிக உயரமான மலைச்சிகரம் எது?

374. பூமத்திய ரேகைக்கு அருகே இருப்பது எது? 1. கென்யா; 2. நைஜீரியா; 3. மலாயா.

375. குட்டி போட்டுப் பால் கொடுக்கும் பிராணிக்கு மம்மல் என்று பெயர் இல்லையா? உலகிலேயே மிகப் பெரிய மம்மல் எது?

376. ஒரு வகை ஒட்டகத்துக்கு இரண்டு திமில்கள் இருக்கும். அது எந்த வகை?

377. ஆஸ்திரேலியாவில் வாழும் காட்டு நாயின் பெயர் என்ன?

378. ஆப்பிரிக்க, இந்திய யானைகளுக்கு இடையே தோற்றத்தில் காணும் வித்தியாசம் என்ன?


379. 'காய்பூ' என்பது ஒரு பிராணி. அது எந்த இனத்தைச் சேர்ந்தது?

380. மார்ஸுபியல் பிராணிகள் என்றால் என்ன?

381. ஒரு வகைக் குரங்கின் முகம் நாயின் முகம் போன்றிருக்கும். அதன் பெயர் என்ன?


## தெரியுமே!

விடைகள்: 365. பெர்டினண்ட் மெக்கல்லன் (1) யூரிககாரின் (3) காப்டன் குக் (4) அலெக்சாண்டர் மெக்கன்ஸி 366. (1) ஸ்காட்லாந்து (2) நியூஸிலாந்து (3) இத்தாலி 367. பென்நெவிஸ் 4,406 அடிகள் 368. பிரான்ஸ், இத்தாலி, ஜெர்மனி, ஆஸ்திரியா 369. பான் 370. ரஷ்யாவிலுள்ள மௌண்ட் எல்ப்ருஸ். 371. ஸாம்பஸி நதியினால் 372. ஸூயஸ் கால்வாய் 373. கிளிமஞ்சரோ 374. கென்யா நாட்டின் வழியாகப் பூமத்திய ரேகை போகிறது 375. நீலத் திமிங்கிலம் -- இதன் நீளம் நூறு அடிகள் 376. பாக்ட்ரியன் ஒட்டகம் 377. டிங்கோ 378. ஆப்பிரிக்க யானைக்குக் காதுகள் ரொம்பப் பெரியவை 379. கொரித்துத் தின்னும் இனத்தைச் சேர்ந்த நீரில் வாழும் பிராணி. 380. குட்டிகளைத் தாங்கிக் கொள்ள உடலில் பைகளுள்ள பிராணிகளுக்கு மார்ஸுபியல் என்று பெயர் 381. 'பபூன்'.





கடன் கொடுத்தவர்: எப்ப வந்தாலும் உங்களைக் காணற தில்லையே, என்ன காரணம்?

கடன் வாங்கியவர்: என் அதிர்ஷ்டம்தான் காரணம்.




பாட்டி: ஏண்டா இப்படி வெய்யில் வீணுகாமல் ஊர் சுத்தறே? நான் கருவடாம் செய் திருக்கேன் காயணும். தலையில் வைத்துக்கொண்டு ஊர்சுற்று.




மகன் தந்தையிடம்: ஏனப்பா இந்த ஃபான் அனாவசியமாகச் சுத்தறது? ஊரெல்லாம் பவர் கட்டா இருக்கே. நிறுத்திடறதுதானே?



# சிரிக்கச் சிரிக்க..!

# ராணா சாங்கா

வாண்டுமாமா

நானூறு ஆண்டுகளுக்கு முன்னே வீரத்தின் பிறப்பிடமான பத்தாயிரம் நகரங்களைக் கொண்ட மேவார் சமஸ்தானத்தின் தலைமை தாங்கி ஆட்சி புரிந்தான் ஒரு மாவீரன். அவன் காலத்திலே மேவாரின் புகழ் ஓங்கியது. ரஜபுத்திரர்கள் அவ்விராதி வீரனைத் தங்கள் குலாதிபன் என்று கொண்டாடினார்கள். ராஜபுதனத்தின் காவலன், பாரதத்தின் பூபதி என்றெல்லாம் பாராட்டினர். அவன் பெயர்தான் ராணா சாங்கா. அவர் வரலாற்றைப் படிக்கும் கோழையும் வீரனாகிவிடுவான்.


ராஸ்மல் ராணாவுக்கு மூன்று குமாரர்கள் பிறந்தார்கள். அவர்களில் மூத்தவனே (சங்கரன்) சாங்கா. அடுத்தவர்கள் பிருதிவிராஜ், ஜெய்மல். பட்டத்துக்கு உரியவன் சாங்காதான். ஆனால் பிருதிவியும் ஜெய்மலும் அரியணையில் தாங்களே அமர ஆசை கொண்டனர். பேராசைக்காரர்கள் மட்டுமல்ல, பொறாமை கொண்டவர்களும்கூட. சாங்கா நல்ல அழகன். சிவந்த மேனி. கவர்ச்சியான கண்கள். ஒரே ஒரு குறை. அவன் அதிக உயரமில்லை. ஆனால் குள்ளமல்ல. உருவத்தால் உயரமில்லா விட்டாலும் புகழால் வீரத்தால் உயர்ந்து விளங்கலானான் சாங்கா.

ஒரு நாள் சகோதரர்கள் சேர்ந்து அமர்ந்து உணவருந்திக் கொண்டிருந்தார்கள். அப்போது பிருதிவிராஜ், ''அப்பாவின் காலத்துக்குப் பிறகு மேவாரை நான்தான் கட்டிக் காக்க வேண்டும் போலிருக்கிறது. விதியின் எண்ணமும் அதுதான்'' என்றான்.

தம்பிகளின் மன நிலையை ஒருவாறு புரிந்து கொண்டான் சாங்கா. அவர்களோடு வீண் சண்டையை விரும்பவில்லை. ''யார் அரசனாவது என்பது ஆண்டவன் தீர்மானிக்க வேண்டியதல்லவா? உங்களில் மூத்தவன் நான். அரியணைக்கு உரியவனும் கூட. இது உங்களுக்குத் தெரியாததுமில்லை. ஆனால் அரசாள உங்களுக்கு உரிமையில்லை என்றும் நான் கூறவில்லை. வீண் வாதம் ஏன்? புலி மலைக்குப் போவோம். தெய்வ அருள் பெற்ற தூய அன்னை அங்கு வசிக்கிறாள். அந்தச் சந்நியாசினியின் முடிவை நாம் ஏற்போம். சம்மதமா?'' என்று கேட்டான் சாங்கா. சகோதரர்களும் தங்கள் சம்மதத்தைத் தெரிவித்தனர்.


மேவாரில் புலி மலை என்று ஒரு குன்று. அதில் தவத்தினால் உயர்ந்த தபஸ்வினி ஒருவர் வாழ்ந்து வந்தார். மக்களுக்கும் மன்னர் குலத்துக்கும் அந்த அம்மையாரிடம் அளவிலாத பக்தி, நம்பிக்கை. மூன்று சகோதரர்களும் புலிமலைக்குக் கிளம்பினார்கள். அவர்களுடன் அவர்களுடைய மாமனும் சென்றார். மலையில் உள்ள ஒரு குகைக்குள்தான் அந்தப் பெண் துறவி வசித்து வந்தாள். இவர்கள் சென்றபோது துறவி இல்லை. அவரது வரவுக்காக அவர்கள் காத்திருந்தார்கள்.

குகைக்குள் ஒரு படுக்கையும் கீழே ஒரு சிறுத்தைப் புலியின் தோல் விரிப்பும் திருவோடு கமண்ட



லம் ஆகியவைகளே இருந்தன. முதலில் உள்ளே நுழைந்த ஜெய்மலும் பிருதிவியும் அங்கிருந்த படுக்கையில் அமர்ந்தார்கள். கடைசியில் வந்தார்கள் சாங்காவும் அவர்கள் மாமனும். சாங்கா கீழே யிருந்த வேங்கைப் புலித்தோல் விரிப்பில் அமர்ந்து கொண்டான். மாமா அவன் அருகே ஒரு முழங்கால் புலித்தோல் மீது பதியும்படியாகக் கீழே அமர்ந்து கொண்டார். தபஸ்வினியின் வருகைக்காகக் காத்திருந்தனர். சற்றைக்கெல்லாம் அந்த அம்மையார் அங்கு வந்தார்கள். தம்மைக் காண வந்த காரணத்தைக் கேட்டார் தபஸ்வினி. தங்கள் தந்தைக்குப் பிறகு மேவாரின் மன்னனாகும் பாக்கியம் தங்களில் யாருக்கு என்பதைச் சொல்ல வேண்டும் என்று கேட்டான் பிருதிவிராஜ். அத் தபஸ்வினி அமைதியாக ஒரு தடவை எல்லோரையும் பார்த்தாள். பிறகு வேங்கைப் புலித் தோலைச் சுட்டிக் காட்டி, ''பண்டைக் காலத்தில் மன்னர்கள் வேங்கைப் புலியின் தோல் மீது அமர்ந்துதான் ஆட்சி நடத்தினர்கள். சிங்காதனமாக விளங்கியது இம் மாதிரியான வேங்கைத் தோல்தான். ஆகவே இங்கு யார் வேங்கையின் தோல் ஆசனத்தில் அமர்ந்திருக்கிறார்களோ அவர்களே வேந்தராவார்'' என்றார்.

மெத்தைப் படுக்கையில் அமர்ந்திருந்த ஜெய்மல்லும், பிருதிவிராஜும் வெகுண்டு எழுந்தார்கள். உறையிலிருந்து வாளை உருவிச் சாங்காவின் மீது பாய்ந்தார்கள், அவனை வெட்டிச் சாய்க்க. சாங்காவின் அருகிருந்தமாமன், குறுக்கே வந்து தடுத்திராவிட்டால் விபரீதம் விளைந்திருக்கும். அரச குமாரர்களின் ஆவேசம் கண்ட சந்நியாசினி பீதியடைந்து குகைக்கு வெளியே ஓடி வந்து விட்டாள். தயாரில்லாத நிலையில் தாக்கப்படுவதிலிருந்து சாங்காவை மாமாவினால் தடுக்க முடிந்ததே தவிர சச்சரவைத் தவிர்க்க முடியவில்லை. வெறி கொண்ட இளவரசர் இருவர், சாங்கா தனியன். எத்தனை நேரம் சமாளிப்பான்? தம்பியின் வாள் வீச்சுக்குச் சாங்காவின் விழி ஒன்று பலியாயிற்று. எப்படியோ தப்பினான். தன் குதிரை மீதேறி ஓடினான், விழியிலிருந்து பெருகி வழியும் குருதியையும் பொருட்படுத்தாமல். ஜெய்மல் ஓடும் சாங்காவைத் துரத்திக் கொண்டு போனான். சாங்கா



வின் மாமாவோ பிருதிவியும் பின் தொடர்ந்தால் அபாயம் அதிகமாகுமே என்று பிருதிவியின் வாள் வீச்சைத் தம் வாளினால் தடுத்து அவனை வளைத்துக்கொண்டார்.

சாங்கா தன் குதிரையை விரட்டிக்கொண்டு ஓடினான். அவன் உடலின் காயங்களிலிருந்தும் ஒளி பறிக்கப்பட்ட விழியிலிருந்தும் மட்டும் உதிரம் பெருகவில்லை. அவனைச் சுமந்து ஓடிய குதிரையின் உடலிலும் பலமான காயங்கள். விசுவாசமுள்ள அந்தப் பிராணி வேதனையையும் பொருட்படுத்தாமல் ஓடியது. ஜெய்மல் தன் ஆட்களுடன் துரத்திக்கொண்டு வந்தான். குறுக்கிட்டது ஒரு கோயில். அதன் வாசலில் நின்றிருந்தார் ஒருவர். அவர் பெயர் ராடோர் பீதா. சிறந்த ரஜபுத்திரர். அவருடைய குதிரை பிரயாணத்துக்குத் தயாராக நின்று கொண்டிருந்தது. மூச்சு வாங்க, குருதியில் குளித்த நிலையில் சாங்கா அவர் முன் போய்க் குதிரையை நிறுத்தினான். கீழே குதித்தான். இனியும் தன் குதிரையைக் கொடுமைப்படுத்த விரும்பவில்லை அவன். ''நான் சாங்கா. ராஸ்மல் ராணாவின் மூத்த மகன். என் சகோதரர்கள் என்னைக் கொல்வதற்குத் துரத்தி வருகிறார்கள். என்னைக் காப்பாற்றுங்கள்'' என்றான் ராடோர் பீதாவிடம்.

சாங்காவின் பரிதாப நிலையைக் கண்டார் அந்த வீர ரஜபுத்திரர். இளவரசனின் குணம் பற்றி அறிந்தவர் அவர். ஆகவே ''கவலைப்படவேண்டாம். இதோ என் குதிரை இருக்கிறது. நீ தப்பிச் செல்லும்வரை இந்த இடத்திலேயே உன் எதிரிகளை எதிர்த்துக்கொண்டிருக்கிறேன். நீ கோயிலின் வேறு வழியாகப் போ'' என்றார். அவர் வாய் பேசிக் கொண்டிருந்தாலும் கண்கள் தூரத்தே கிளம்பும் புழுதிப் படலத்தை ஊடுருவிக் கொண்டிருந்தது. சற்றைக்கெல்லாம் ஜெய்மலும் அவன் வீரர்களும் கோயில் வாசலுக்கு வந்தார்கள். வாசலின் வழியை மறைத்துக் கொண்டு நின்றார் ராடோர் பீதா. அவர் கையில் உருவிய வாள் மின்னிக்கொண்டிருந்தது.

''எங்கே சாங்கா?'' என்று கேட்டான் ஜெய்மல்.

''அவன் என் அடைக்கலப் பொருள். விருந்தாளி'' என்றார் பீதா.

''யாரானால் என்ன? அவனை நாங்கள் அடைந்தே தீருவோம்... ம்... கோயிலுக்குள் நுழைந்து தேடுங்கள்'' என்று தன் வீரர்களுக்கு ஆணையிட்டான் ஜெய்மல்.

''உள்ளே நுழைய முடியாது. என் விருந்தாளியின் மீது உங்கள் விரல் படவும் விடமாட்டேன்'' என்றவரின் வாள் மின்னியது. அத்தனை பேர்களின் வாள் வீச்சையும் அந்த ஒற்றை வாளினால் எத்தனை நேரத்துக்குச் சமாளிக்க முடியும்? ஜெய்மலும் அவன் ஆட்களும் முடிவில் கோயிலுக்குள் புகுந்தார்கள், அந்தப் புனிதரின் உயிரற்ற உடலை மிதித்துக் கொண்டு. அதற்குள் சாங்கா வெகு தூரம் போய் விட்டிருந்தான். அடைக்கலம் அளித்தவனை ஆபத்திலிருந்து காப்பாற்றி விட்டோம் என்ற அமைதியோடுதான் அந்த வீரர் பீதாவின் ஆவி பிரிந்திருக்கும்.

ஒற்றைக் கண்ணை இழந்தாலும் ஒப்பற்ற வீரனாக மேவாரின் மன்னனாக மக்கள் போற்றும்படி அரசாண்டான் சாங்கா. சாங்கா சிங்காதனமேறிய போது டில்லியிலே நல்லாட்சி இல்லை. வடநாடு முழுவதும் முஸ்லீம் சிற்றரசுகள் பல முளைத்திருந்தன. அண்டை நாடான உதயபுரியோ உட்பகையினால் உருக்குலைந்து கிடந்தது. சாங்கா மேவாரின் தலைமையை ஏற்றதும் தன் நாட்டையும் அண்டை நாட்டையும் அமைதிப்படுத்தினான். டில்லி சுல்தான்கள் அடுத்தடுத்துத் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தனர். பதினெட்டுப் படையெடுப்புக்கள். பலமுறை தோற்றோடினான் டில்லி சுல்தான். மாளவ மன்னனும் மோதிப் பார்த்தான், இந்த மேதினி போற்றும் வீரனிடம். தோல்வி கண்டு சிறைப்பட்டுப் பிறகு 'பிழைத்துப் போ' என்று உயிர்ப் பிச்சை கொடுத்து விடுதலை செய்தான் பெருந்தன்மை கொண்ட சாங்கா.

லோடி வமிசத்துச் சுல்தான்களை ஓட ஓட விரட்டி வெற்றி கொண்டவன் சாங்கா. பாரதத் தாயின் மடியில் அன்னியன் கால் ஊன்றி நிற்பதைப் பொறாதவன், மொகலாயர் ஆதிக்கம் வேரூன்றுவதைக் கண்டு வெகுண்டெழுந்தான். துருக்கியிலிருந்து துரத்தப்பட்ட பாபர் பாரதத்தில் புதிய வமிசத்தை உருவாக்கி விட்டானே என்று உருகிப் போனான். பாபரை எதிர்க்கப் படை திரட்டினான் வீரன் சாங்கா. எண்பதினாயிரம் குதிரை வீரர், இருபதினாயிரம் வில் வீரர், ஐந்நூறு யானைகள், பேரரசர்கள் எழுவர், சிற்றரசர்கள் ஒன்பது பேர், குறுநில மன்னர் நூற்று நாலு பேர். இத்தனை கோலாகலமாக வீறு கொண்டெழுந்தது சாங்காவின் படை வெள்ளம். வெற்றி கொள்ள முடியாத வீரர் படை.

பாபரின் படைகளும் ஆக்ராவிலிருந்தும் டெல்லியிலிருந்தும் கிளம்பின. சிக்ரி என்னும் இடத்தில் இரு பெரும் படைகளும் மோதிக்கொண்டன. ராணா சாங்கா

வுக்கு ஆரம்பத்தில் வெற்றி மேல் வெற்றி. அலமந்து போனான் மொகலாய மன்னன். ரஜபுத்திரரின் வீரப் போரைக் கண்டு வியந்துபோனான் மொகலாயன். தோல்வியைத் தழுவ வேண்டிய இந்தச் சமயத்திலேதான் பாபர் அதை வெற்றியாக்கப் பாசறையிலே மதுக் கிண்ணங்களை கீழே வீசி நொறுக்கி, 'இனி மதுவைத் தொடுவதில்லை' என்று வீர சபதம் எடுத்துக் கொண்டான். மதுவிலேயே ஊறிய மன்னனின் மனமாற்றம் போரையே மாற்றி அமைத்தது. மொகலாய வீரரும் தளபதிகளும் ஒரு புதிய வெறியுடன் ரஜபுத்திரரைத் தாக்கலாயினர். விதி என்றுதான் கூற வேண்டும். அத்துடன் மனிதர்களின் சதியும் சேர்ந்துகொண்டது. சாங்காவின் படை வரிசையில் முன்னணியில் இருந்த தளபதி ஒருவன் துரோகியாக மாறிவிட்டான். தன் வீரருடன் மொகலாயர் பக்கம் சேர்ந்து கொண்டான். பாபரின் பீரங்கிப் படை ரஜபுத்திரர்களுக்குப் புதிய ஒன்று. அது விளைவித்த நாசம் பயங்கரமானது. வாளையும் தோளையுமே நம்பிப் போரிட்ட ரஜபுத்திரர்களுக்கு, பீரங்கிப் போர்ப் பழக்கமில்லாததால் படு தோல்வியைத் தரலாயிற்று.

சாங்காவின் உடலெல்லாம் காயம். பீரங்கித் தாக்குதலுக்கு உட்பட்டு ரத்த அபிஷேகம் செய்யப் பட்டிருந்தது அவன் உடல். அந்த நிலையிலும் மனம் தளராது தன் வீரர்களை ஊக்குவித்துக் கொண்டு போர்க்களத்தில் முன்வைத்த காலைப் பின் வைக்காமல் நின்றான். தலைவனின் ஆவேசம் கண்டு வீராவேசத்துடன் போரிட்டனர் வீரர்கள். ஆனால் ரஜபுத்திர வீரர் சாரி சாரியாகச் சரிந்தனர். வெற்றித் தேவதை விணர்களின் பக்கம் போய்விட்டதை உணர்ந்த வீரன் ராணா சாங்கா வேதனையுடன் பின்வாங்கினான். பின் வாங்கியவன் தாய்நாட்டுக்குத் ' திரும்ப வில்லை. மேவார் மலைச்சாரலில் போய் ஒதுங்கினான். பாபரைப் புறங்காணாது தலைநகரில் நுழைவதில்லை என்று வீரசபதம் செய்து கொண்டான் சாங்கா. அந்தச் சுத்த வீரன் உயிரோடு இருந்திருந்தால் தன் சபதத்தை முடித்திருப்பான். இந்திய சரித்திரத்தின் போக்கே மாறியிருக்கும். பாபரோடு மொகலாய வம்சம் அழிந்து பட்டிருக்கும். ஆனால் வஞ்சனையும் சூழ்ச்சியும் ராணா சாங்காவின் உயிரைக் குடித்து விட்டன. அருகிருந்த மந்திரியே பதவிக்கு ஆசைப் பட்டுத் தன் அருமந்த மன்னனுக்கு விஷமிட்டுக் கொன்று விட்டான் என்று கூறுகிறது சரித்திரம்.

வீராதிவீரன், மன்னாதிமன்னன், தன் வாழ் நாளெல்லாம் வெற்றியே கண்ட ராணா சாங்கா இறக்கும்போது எப்படி இருந்தான் தெரியுமா? அந்த வீர உடலின் லட்சணங்கள் இவைதாம். படியுங்கள். கட்டழகனான சாங்காவின் உடலில் ஏற்பட்ட காயங்களுக்கு அளவே இல்லை. தம்பியோடு போரிட்டதிலே ஒரு கண் போயிற்று. இப்ராஹிம் லோடியுடன் போரிட்டபோது ஒரு கையை இழந்தான். மாளவ மன்னனோடு பொருதியபோது உடலிலே உள்ள ஓர் எலும்பு நொறுங்கியது. ஒரு போரிலே பீரங்கிக் குண்டு ஒரு காலைக் கொண்டு போயிற்று: ஆகவே நொண்டியானான். இவை இத்தனைக்கும் மேலாக அவன் உடலிலே எண்பது போர்க் காயங்களின் வடு இருந்தன. இவனல்லவோ வீரன்! பாரதத் தாய் இத்தகைய வீரனைப் பெற்றெடுத்ததில் மகிழ்ந்து போனாள். அதே தாய் அவனை இழந்தபோது தன் சௌபாக்கிய மெல்லாம் இழந்து அடிமையானாள். ராணா சாங்காவின் வீரம் மகத்தானது.


● நம்முடைய கேட்கும சக்தி நாள் முழுவதும் ஒரே அளவில இருக்காது என்றும், காலையில் மிகக் கூர்மையாகவும், நடுப்பகலில் மந்தமாகவும், சாப்பாட்டுக்குப்பிறகு மிக மந்தமாகவும் இருக்கும் என்று கூறுகிறார்கள்ஆராய்ச்சியாளர்கள்!

● பூமியில் இருக்கிற தூசுகளைத் தவிர ஒவ்வோர் ஆண்டும் வான வெளியிலிருந்து சுமார் பத்து லட்சம் டன் தூசு பூமியில் விழுகிறது! இது எரி நட்சத்திரங்களின் அழிவினால் உண்டாகிறது என்கிறார்கள் விஞ்ஞானிகள்.


● எகிப்திலுள்ள நைல் நதியில் வாழும் 'போர்மிரஸ்' என்னும் மீன்கள், மனிதன் தொலைவில் வரும்போதே அறிந்து கொண்டு, வலையிலும் தூண்டிலிலும் சிக்காதவாறு வெகு தூரத்துக்குச் சென்று தப்பிவிடுகின்றன. —ஆழி











# சுண்டு குண்டு சீமாத்தாத்தா

சாமா



கொல்லைப் புறத்திலிருந்து சுண்டு ஓடி வருகிறான். சமையல் அறை வழியே ஓடி கறிகாய் நறுக்கும் பாட்டியைத் தாண்டிக் குதித்து, "ஹௌஸ் தட்! போல்ட்!" என்று பந்தை எறியும் பாவனையில் கையைச் சுழற்றுகிறான். குண்டுவோ விறகு கட்டையை வைத்துக் கொண்டு வீசுகிறான். இவனுக்குப் பந்து எது தெரியுமா? பாட்டி அடுப்பெரிக்க வைத்திருந்த எரிமுட்டை உருண்டைகள்தான்! அவன் அடித்த ஓர் உருண்டை சீமாத் தாத்தா தலையில் பட்டுச் சுக்குநூறாக உடைந்து தாத்தா முகத்தைக் கரியாக்குகிறது. "கிரிக்கெட் பைத்தியம் நன்றாத் தலைக்கேறி விட்டது இந்தத் தடிப் பசங்களுக்கு. ஒரு பாட்டும் பந்தும் வாங்கித் தொலைக்கிறேன்" என்று வாங்கிக் கொடுத்து விட்டார்.

அவ்வளவுதான்! வீடு கிரிக்கெட் கிரௌண்டாக மாறியது. அதோடு இல்லாமல் பாட்டியின் மேல் ஒரு கோட்டை மாட்டி ஒரு ஹாட்டையும் தலையில் வைத்து, "டேய்! நம்ப பாட்டிதான் அம்பயர்!" என்றான் சுண்டு. இது என்னடா கூத்து, நான் இதெல்லாம் போட்டுண்டு என்னடா பண்ணணும்?" என்றாள் பாட்டி.

"ஒண்ணும் பண்ண வேண்டாம். நாங்க அவுட்டான்னு நீ சொல்லணும்!" என்றான் குண்டு.

"இது ஏதுடா வம்பு அவுட்டான்னு உங்களுக்கே தெரியாதா?" என்று அங்கலாய்த்தாள் பாட்டி.

"டேய்! வீட்டுக்குள்ளே என்னடா கிரிக்கெட்? ஐயையோ! இதென்னடி நீ கோட்டும் ஹாட்டும் மாட்டிண்டு? உனக்குக்கூடவா கிரிக்கெட் பைத்தியம்?" என்றார் சீமாத் தாத்தா.

குண்டுவும் சுண்டுவும் கொல்லென்று சிரித்தார்கள்.

"டேய், சுண்டு குண்டு, என்னடா பெரிசா கிரிக்கெட்டைப் பற்றி தெரிந்து கொண்டீர்கள்? அந்த நாளில் நானும் கிரிக்கெட் ஆடியிருக்கேண்டா. நான் அடிச்ச சிக்சர் பெவிலியன்லே உட்கார்ந்திருந்த ஒரு வழுக்கைத் தலைக்காரர் மண்டையில் விழுந்தது. தலையில் ஒரு லிங்கமே புறப்பட்டு விட்டது. அவர் என்ன செய்தார் தெரியுமா? தலையைப் பிடித்துக் கொண்டு நான் விளையாடிய இடத்தை நோக்கி ஓடினார். தலை வீங்கிய காரணத்துக்கு என்னை உதைக்கத்தான் வருகிறார் என்று பலர் தடுத்தும் அவர்களையெல்லாம் மீறி என்னிடம் வந்து மிகப் பணிவாகக் கை குலுக்கித் தன் தலையிலுள்ள வீக்கத்தின் பக்கத்தில் என்னிடம் ஒரு ஆட்டோ கிராஃப் வாங்கினார். கூட்டத்தில் ஒரே ஆரவாரம்! அப்படி ஆடுவேனாக்கும்!" என்றார் தாத்தா.

"அப்ப நாம் எல்லோரும் ஆடலாம்" என்று வாசல் பக்கம் போனார்கள்.

சீமாத் தாத்தா பாட்டைப் பிடித்தார். சுண்டுவும் குண்டுவும் மாறி மாறிப் பந்தை வீசினார்கள். தாத்தா இதோ, 'லெக் பிரேக்' இதோ 'ஆஃப் பிரேக்" என்று சொல்லிப் பந்தை வீசியவண்ணம் இருந்தனர் குண்டுவும் சுண்டுவும். தாத்தா ஒவ்வொரு பந்தையும் சுழற்றி அடித்தார்.

"உங்க லெக் பிரேக்கெல்லாம் எனக்குத் தண்ணீர்பட்ட பாடம். இந்த ஜென்மத்தில் நான் உங்க 'லெக் பிரேக்'குக்குப் பலியாக மாட்டேன்" என்று பவுண்டரி, சிக்சராகவே அடி அடி என்று அடித்தார். பக்கத்து வீட்டு வழுக்கைத் தலை மாமா தலை தப்பியது. தலையில் அடிபட்டிருந்தால் அவர் ஆட்டோகிராஃபுக்கு வரமாட்டார். அடியோடு கிராபுக்குத்தான் வந்திருப்பார்.

சுண்டுவும் குண்டுவும் பந்து வீசி ஓய்ந்து போனார்கள்.

இருட்டும் நேரம். ஆகவே, விளையாட்டை நிறுத்தி உள்ளே சென்றார்கள். "டேய்! டேய்! உங்க 'லெக் பிரேக்' என்ன ஆச்சுடா?" என்று சொல்லி பட்டியாலா மகாராஜா மாதிரி நடந்தார்.

சுண்டுவும் குண்டும் ரகசியம் பேசிவிட்டு, "தாத்தா ராஜா மாதிரியே இந்த நாற்காலியில் உட்கார்ந்து கால்'பேடை' கழற்றுங்கள்" என்றான். தாத்தாவும் அந்த ஓட்டை நாற்காலியில் உட்கார்ந்தார். அவ்வளவுதான்! 'தடால்' நாற்காலியின் கால் உடைந்து தாத்தா கீழே உருண்டார். "தாத்தா! லெக் பிரேக்' !" என்றார்கள் சுண்டுவும் குண்டுவும்.

"உங்க வீராப்பு எங்கே, 'லெக் பிரேக்'குக்குப் பலியானீர்களா?" என்று சுண்டுவும் குண்டுவும் குதித்தார்கள். பாட்டியும் கோட்டும் ஹாட்டும் அணிந்தபடியே 'தாத்தா அவுட்' என்று கத்தினாள். ஏனென்றால் ஆட்டம் முடியும் வரை அவள் அம்பயராச்சே!

கங்காராம் பெரும் பணக்காரர். பம்பாய் வாசி. இந்தியாவின் ஒவ்வொரு மாகாணத்திலும் அவருக்கு ஏதாவது ஒரு தொழிற்சாலையோ, வியாபார நிறுவனமோ இருந்தது. பெரிய தொழிலதிபரான அவருக்குத் தென்னகத்தில் நீலகிரியில் ஒரு பெரிய எஸ்டேட் இருந்ததில் வியப்பில்லை. ஊட்டியில் ஒரு பெரிய பங்களாவும் இருந்தது. அந்தப் பங்களாவில் வருடத்தில் ஒரு மாதம் தம் குடும்பத்துடன் வந்து தங்குவார் கங்காராம். கோடையில் குளுமையை அனுபவிக்க மட்டுமல்ல, அவரது இந்த ஊட்டி விஜயம். அவருடைய ஒரே செல்வ மகள் ஷீலா குன்னூரில் இருந்த ஒரு பிரபல கான்வெண்டில் படித்து வந்தாள். அவளைக் காணவும் தங்களோடு சில வாரங்கள் அவளை வைத்துக் கொள்ளவுமே அவர் அங்கு போவது வழக்கம். பெரும் பணக்காரரான அவருக்கு ஷீலாவைத் தவிர வேறு குழந்தைகள் கிடையாது. ஆகவே அவளை எத்தனை செல்லமாக வளர்ப்பார் அந்தப் பணக்காரர் என்பதை நீங்களே கற்பனை செய்து கொள்ளுங்கள்.

ஷீலா ரொம்ப ரொம்ப அழகான பெண். அழகைப் போலவே புத்திசாலியும்கூட. வழக்கம்போலக் கங்காராம் இந்த ஆண்டும் ஊட்டிக்கு வந்திருந்தார், ஷீலாவைக்காண.

# ஷீலாவைக் காணோம்!

கதை :
வாஸ்நுமாமா

சித்திரம் :
ரமணி

கங்காராமின் பங்களாவுக்கு அடுத்த நிலத்தில் வசித்து வந்தான் மாடசாமி. நல்ல உழைப்பாளி. கங்காராமைப் போலப் பெரும் பணக்காரனில்லாவிட்டாலும் வசதியுள்ளவன். கொஞ்சம் சொந்த நிலமிருந்தது. காய்கறிகள் பயிரிட்டு லாரியில் சந்தைக்கு அனுப்புவான். மேல்நாட்டுச் செம்மறியாடுகள் வேறு இருந்தன. அவைகளின் ரோமம் கம்பளி நெய்யப் பயன்பட்டு அவனுக்குக் கணிசமான தொகையைக் கொடுத்து வந்தது. அவனுக்குக் குழந்தைகள் கிடையாது. ஆனால் குழந்தையைப் போல் வளர்த்து வந்தான் ஓர் அல்சேஷன் நாயை. அதற்கு டைகர் என்று பெயர். 'டைகர்' என்றால் புலி என்றுதானே பொருள். இந்த நாயும் செயலில் புலிதான். குணத்திலோ குழந்தை. வாயால் பேசத்தான் தெரியாதே தவிர அதன் அறிவு மனிதர்களுக்குக்கூட வராது. மாடசாமி தன் உயிரேபோல நேசித்து வந்தான் டைகரை.

டைகரும் ஷீலாவும் எப்படி நண்பர்களானார்கள்? அதுதானே கதை!

பக்கத்தைப் புரட்டுங்கள்!


வழக்கம் போல மாடசாமி தன் ஆடுகளை ஓட்டிக் கொண்டு கிளம்பிறான், டைகர் பின் தொடர...
டேய் டைகர்! ஆடுங் களை ஒதுக்கி ஓட்டு. அடுத்த பங்களா சேட் வந்திருக்காரு போலே. அவ அவங்க பூந்தோட்டத்துக்குள்ளே பூந்துடப் போவுது.
ஷீலா தன் தோழியுடன் பந்தாடிக் கொண் டிருந்தாள் தோட்டத்தில்.
நான் பந்தைத் தூக்கிப் போடறேன், உன்னாலே பிடிக்க முடியுமா சின்னி?
ஷீலா வீசிய பந்து தோட்டக்காரன் வீட்டு ஓட்டில் விழுந்து உருண்டு, மழை நீர் வழிந்து போகப் பயன்படும் தகரத்தில் போய்த் தங்கி விடுகிறது...
இதோ ஏணி இருக்கிறது. பந்தை எடுத்து விடுகிறேன்.
எதிர் பாராத விதமாக ஏணி சரிந்துவிட ஷீலா வின் கை தகரத்தைப் பற்ற, அது கனம் தாங்கா மல்... ஷீலா அபாயமான நிலையில் தொங்கலானாள்.
ஐயோ, அப்பா...!
!!!
ஓலம் கேட்டு ஓடி வருகிறது டைகர்.
கணமும் தாமதிக்க வில்லை டைகர். தீவனத்தை மூடிக் கட்டி இருந்த தார்ப்பாலினைக் கவ்வி இழுத்துக் கொண்டு...
ஆபத்து... ஆபத்து. ஷீலா அக்காவைக் காப்பாத்த வாங்க.


கீழாகத் தார்ப்பாலின் வரும்படியாக அதை இழுத்துக் கொண்டு நின்றது டைகர். அதே விநாடி ஷீலாவின் பிடி தளர்ந்து கீழே, இல்லை, தார்ப்பாலினில் விழுந்தாள்.
அதனால் அடி படவில்லை. அந்தப் பந்துக்காக இப்படியா ஆபத்தில் சிக்குவது?
என் அருமை ஷீலாவைக் காப்பாற்றிய அறிவுள்ள நாய் நீ. அழகான வாலும் கூட.
இல்லை. அவள் வீசும் பந்தையெல்லாம் அது லாகவமாகக் கௌவிக் கொண்டு வரும். நாயிடம் அவள் அன்பு பெருகியது. டைகரைத் தனதாக்கிக் கொள்ள விரும்பினாள் ஷீலா...
உங்கள் டைகரை என் ஷீலா மிகவும் விரும்புகிறாள். இந்தாருங்கள், பூர்த்தி செய்யப்படாத செக். இதில் உங்கள் விருப்பம் போல நீங்கள் எந்தத் தொகையும் எழுதிக் கொள்ளலாம்.
மன்னிக்க வேண்டும். என் டைகர் வியாபாரப் பொருளல்ல.
முதலாளியின் மகள் நாய் வளர்க்க ஆசைப்படுகிறாள் என்பதை அறிந்த பண்ணை மானேஜர், நல்ல உயர்ந்த ஜாதி நாய்கள் இரண்டைக் கொண்டு வந்தார்...
மிக உயர்ந்த ஜாதி நாய்கள் இவை. இரண்டையுமே ஷீலாவிற்குக் கொடுங்கள்.
அப்பா! எனக்கு அதெல்லாம் வேண்டாம். டைகர் தான் வேணும்.
தொடரும்...

# அதிர்ஷ்டம் அடித்தது!



பி.எஸ்.மணி

ஒரு நாள் காலை அதிர்ஷ்டமும் புத்திசாலித்தனமும் ஒன்றையொன்று சந்தித்துக் கொண்டன. பழகாவிட்டாலும் பார்வையாலேயே ஒன்றை மற்றது புரிந்து கொண்டது.

அதிர்ஷ்டம் முன்னேறிச் சென்று புத்திசாலித்தனத்தைப் பின்னுக்குத் தள்ளியது. "கொஞ்சம் ஒதுங்கி நில். நான் முன்னால் போகிறேன்!" என்றது அதிர்ஷ்டம்.

புத்திசாலித்தனம் பிடிவாதமாக வழிவிட மறுத்தது. "நான் எதற்காக ஒதுங்க வேண்டும்? உன்னைப்போல் நானும் நல்லவன்தானே?" என்று கேட்டது.

"உண்மையைச் சொன்னால் உனக்குக் கோபம் வரும். நீ நினைப்பதுபோல் இல்லை!" என்று குத்திக் காட்டியது அதிர்ஷ்டம்.

புத்திசாலித்தனம் அதற்கு விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை. ஆனால் அதிர்ஷ்டமோ, "உன்னைவிட நான் எவ்வளவோ நல்லவன்" என்று முத்தாய்ப்பு வைத்தது.

"உன்னைவிட மேன்மையானவன் நான்தான்!" என்றது புத்திசாலித்தனம், விடாமல்.

அதிர்ஷ்டம் பாதையை மறித்து, "உன் முடிவுக்குக் காரணம் சொல்" என்று கேட்டது.

"யாரால் அதிக நன்மை செய்து உலகில் மனிதனை முன்னேற வைக்க முடியும் என்று பார்க்கலாமா?" என்று சவால் விட்டது, புத்திசாலித்தனம். சவாலை ஏற்றது அதிர்ஷ்டம்.

"அங்கே ஒரு விவசாயி நிலத்தை உழுது கொண்டிருக்கிறான். அவனுக்கு நீ உதவி செய்து என்னைவிடச் சிறந்தவன் என்பதை நிரூபித்துக் காட்டு, பார்க்கலாம்!" என்றது அதிர்ஷ்டம்.

உடனே புத்திசாலித்தனம் அந்த விவசாயியின் உடலுக்குள் புகுந்து தன் செயலைத் தொடங்கி விட்டது.

அவனுள்ளே 'புத்திசாலித்தனம்' புகுந்ததும் விவசாயி 'இப்படி நிலத்தை உழுவது காலத்தை வீணாக்குவதல்லவா?' என்று பாடத் தொடங்கிவிட்டான்.

"புத்திசாலியான நான், எனது தகுதிகளுக்கேற்ப நல்ல வேலை தேடிக் கொள்வேன்!" என்ற முடிவுக்கு வந்தவன் உழுவதைக் கைவிட்டு வீட்டுக்குத் திரும்பினான். "பெரிய நகரத்துக்குப் போய் நல்ல வேலை தேடப் போகிறேன்!" என்று பெற்றோரிடம் சொல்லிவிட்டுக் கிளம்பிவிட்டான் அந்த வாலிப விவசாயி. இந்த மாதிரி அவன் பேசி அவன் பெற்றோர் பார்த்ததில்லை. ஆகவே, திகைத்துப் போனார்கள்.

"பெரிய நகரத்தில் என்ன செய்யப் போகிறாய்?" என்று கேட்டார் தந்தை.

"பெரிய நகரத்தில் இப்படி நீ உழுவதற்கு வசதி உண்டா?" என்று கேட்டாள் தாயார்.

"நகரத்தில் பலவிதமாகச் சம்பாதிக்க வழி உண்டு. நான் ஒரு பெரிய தோட்டக்காரனாகவும் ஆகலாம்!" என்றான் இளைஞன்.

"விரைவில் நீ செய்யும் காரியம் தவறு என்று உணர்வாய். அந்தச் சமயத்தில் இங்கே திரும்பி வரச் சங்கோசப்படாதே. உன் சகோதரன் இங்குள்ள நிலங்களையும் வீட்டினையும் தனதாக்கிக் கொள்வான். உனக்குக் கிடைக்காது!" என்றார் தந்தை.

"பரவாயில்லை. நான் நகரத்தை விட்டுத் திரும்ப மாட்டேன். நான் அரசனின் தோட்டக்காரனாகி விட்டால் இந்த நிலங்களும் வீடும் தேவையில்லை!" என்றான் இளைஞன்.

பல நாட்கள் நடந்து நடந்து பட்டினியால் வாடிக் கடைசியில் நகரத்துக்கு வந்தான். அரசனிடம் சென்று தனக்கு அரண்மனைத் தோட்டக்காரன் வேலை தரும்படி கேட்டான். அவனுடைய திறமையான பேச்சைக் கண்டு அரண்மனைத் தோட்டக்காரர்களின் பயிற்சியாளனாக மன்னன் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டான்.

வெகு சீக்கிரமே அவன் தலைசிறந்த தோட்டக்காரனாக விளங்கினான். பிரதம தோட்டக்காரனுக்குப் புதியவன் அரசனின் பாராட்டுதலைப் பெறுவது கொஞ்சமும் பிடிக்கவில்லை.

அன்று இளம் விவசாயி அற்புதமாகப் படைத்திருந்த தோட்டத்தில் மன்னனும் ராணியும் பவனி வந்தார்கள். அவர்களோடு அரசகுமாரியும் நடந்து வந்தாள். அன்று அரச குமாரி தனியாகத் தன் நாயுடன் நடந்து வந்து

தோட்டத்தின் அழகைக் கண்டு மயங்கிக் கொண்டிருந்தாள். ஆனால் அவளால் பேச முடியாது. ஊமை. பன்னிரண்டு வயதிலிருந்து அரச குமாரி தன் பேசும் சக்தியை இழந்து விட்டாள்.

ஐந்து வருஷங்களாக அரசன் தன் மகளுக்குப் பேச வைக்கப் படாத பாடு பட்டான். பல மாந்திரீகர்கள் வைத்தியர்கள் பலபடியாக அவளுக்குக் குணம் காண முயன்றார்கள்; முடியவில்லை. ''என் மகளைப் பேச வைக்கும் சக்தி படைத்தவனுக்கு அவளை மணம் முடித்து வைப்பதோடு ராஜ்யத்தையும் தருவேன்!'' என்று அரசன் நாடு முழுவதும் பறையறிவிக்கச் செய்தான்.

யார் யாரோ வந்தார்கள். ஆனால் யாருக்கும் இளவரசியை அடையும் அதிர்ஷ்டம் கிட்டவில்லை.

இளம் விவசாயி இளவரசியிடம் கேட்டான்:. அனைத்துக்கும் அரசகுமாரியிடமிருந்து வெறும் கண்ணீர்ப் பெருக்கே பதிலாகக் கிடைத்தது.

ஒரு குறிப்பிட்ட நாளன்று அவை கூடியிருந்தபோது அந்த அதிசய சாதனையைச் செய்தான் இளம் விவசாயி. அரசகுமாரி தன் நாய்க்குட்டியுடன் பெண்களுக்கு மத்தியில் அமர்ந்திருந்தாள். இளைஞன் நாய்க் குட்டியிடம் பேசத் தொடங்கினான்.

''அருமை நாயே! எஜமானனே! வணக்கம். நான் எப்போதும் உன்னைத் தோட்டத்தில் சந்திப்பேன். இன்று எனக்குப் பெரிய பிரச்னை. உன் ஆலோசனை தேவை. ஒவ்வொருவரும் நீ எவ்வளவோ புத்திசாலி என்று சொல்லுகிறார்கள். உன்னிடம் உதவி கோரி வந்திருக்கிறேன்.

''ஒரு நாள் நானும் ஒரு தையல்காரரும் சிற்பியும் நீண்ட பிரயாணம் செய்தோம். காட்டு வழியே சென்றபோது ஒரு குடிசையும் தென்படாததால் அன்றிரவு வெட்ட வெளியில் தங்கும்படி நேர்ந்தது. நரிகள் வந்து தொல்லைப் படுத்தும் என்பதால் பெரிய நெருப்பு மூட்டி ஒருவர் மாற்றி ஒருவர் விழித்திருந்து அந்தக் கணப்பைக் காவல் காத்தோம். முதலில் சிற்பி கண் விழித்திருக்க முடிவு செய்தார். அந்தச் சிற்பி விழித்திருக்கும்போது கீழே கிடந்த ஒரு மரக் கட்டையை எடுத்து அதை ஒரு பெண் உருவாகச் செதுக்கினான்!''


அரசகுமாரி இப்போது இளைஞனின் பேச்சில் கவனம் செலுத்தினாள்.

சிற்பியின் நேரம் முடிந்ததும் தையல்காரனை எழுப்பி அவனைக் கண்காணிக்கச் சொன்னான். 'எனக்குப் பொழுது போகாததால் இந்தக் கட்டையைப் பெண் உருவமாகச் செதுக்கினேன். நீ ஒரு தையல்காரன். இதற்கு உடை தைத்துப் போடு' என்றான் சிற்பி. அந்தப் பெண் உருவத்துக்குத் தன் கைத்திறனால் உடை தைத்தான் அவன். பிறகு இளம் விவசாயியாகிய என் நேரம் வந்தது. நான் என்ன செய்வது என்று தெரியாமல் விழித்தேன். நான் அந்த மரப் பொம்மைக்கு உயிர் கொடுத்துப் பேசச் செய்தேன். சிற்பியும், தையல்காரனும், கண் விழித்து மரப் பொம்மை பேசுவதைக் கண்டு அதிசயித்தனர். ஒவ்வொருவரும் தாம் செய்த பணிக்காகச் சண்டை போடத் தொடங்கினோம். சிற்பி நான்தான் அந்த உருவத்தைச் செதுக்கினேன்; அவள் எனக்குத்தான் உரியவள்' என்றான். 'நான் மானத்தைக் காக்க அவளுக்கு உடை அளித்தேன். ஆகவே அவள் எனக்குத் தான் சேர வேண்டியவள்' என்றான்.

''பேசும் சக்தி கொடுத்ததனால் அவள் எனக்கே உரியவள் என்றேன் நான். ஆகவே. இந்தப் பொம்மைப் பெண் யாரைச் சேர வேண்டியவள் சொல், பார்க்கலாம்'' என்று நாயிடம் கேட்டான் இளைஞன்.

நாய் பதில் பேசவில்லை. ஆனால் அரசகுமாரி துள்ளிக் குதித்து, ''உனக்குத்தான் அந்தப் பொம்மை சேர வேண்டும். நீதான் பேசும் சக்தியை அளித்தவன்! வெறுமனே மரப் பொம்மை செதுக்கினால் போதுமா? உடை அணிவித்தால் போதுமா? நீதான் அந்தப் பெண் உருவத்துக்கு உயிரும் பேசும் சக்தியும் கொடுத்தாய்!'' என்றாள்.





புத்திசாலியான விவசாயி மகிழ்ந்து போனான். ''அரசகுமாரியே! நீ உன் சொந்தக் குரலிலே தீர்ப்பை வழங்கி விட்டாய். நான் உனக்குப் பேசும் சக்தி அளித்ததனால் நீயும் எனக்கே உரியவள்'' என்று கூறினான்.

மன்னனும் மகிழ்ந்தான். ஆனால் அவன் மகிழ்ச்சி நீண்ட நேரம் நிலைத்திருக்கவில்லை. அந்த இளைஞன் ஒரு சாதாரண விவசாயியின் மகன் என்ற நினைப்பு வந்ததும் மகிழ்ச்சி இருந்த இடம் தெரியாமல் மறைந்து போய் விட்டது.

''அரசே! இவனுக்கு நிறைய வெகுமதிகள் கொடுத்துக் கௌரவித்துவிடலாம். ஆனால் விவசாயியின் மகனை இவனுக்கு உங்கள் மகளைத் தருவது உசிதமல்ல!'' என்றார் மந்திரி.

இளம் விவசாயி உடனே எதிர்ப்புக் குரல் எழுப்பினான்.

''மன்னவனே! சொன்ன சொல்லைக் காப்பாற்ற வேண்டும்!'' என்றான் விவசாயி

''யார் அரசனை எதிர்த்துப் பேசுகிறார்களோ, அவர்களுக்கு மரண தண்டனை'' என்றார் மந்திரி.

ஆனால் விவசாயி தன் எதிர்ப்புக் குரலை நிறுத்தவில்லை. அரசனின் கோபம் அதிகமாக, ''அவன் தலையைச் சீவிச் சிரச்சேதம் செய்து விடுங்கள்!'' என்றும் தண்டனை விதித்தான்.

அப்பொழுதுதான் அந்த இளைஞனுக்குத் தான் விவசாயியின் மகனாகவே காலம் கடத்தி யிருக்கலாமே என்று தோன்றியது. சிறைச்சாலைக் காவலர்கள் தண்டனையை நிறைவேற்றக் கத்தியைத் தீட்டினர்.

அதிர்ஷ்டம் கூட்டத்தோடு கூட்டமாக இந்தத் தண்டனையை வேடிக்கை பார்த்து நின்றது. உடனே புத்திசாலித்தனத்திடம், ''உன் புத்திசாலித்தனம் இவனை எந்த நிலையில் கொண்டு வந்து நிறுத்தி விட்டது பார்! இனி என் திறமையைக் காட்ட வேண்டிய வேளை வந்து விட்டது. நீ வெளியே வா!'' என்று கூறியது.

புத்திசாலித்தனம் இளைஞனிடமிருந்து விடுபட்டதும் அதிர்ஷ்டம் அவனுள் புகுந்து கொண்டது.

அதே சமயத்தில் அரச குமாரி தன் நாயைப் பார்த்தாள். அதைப் பார்த்தவுடன் விவசாயி இளைஞனின் நினைவு வந்தது. உடனே மரப் பொம்மைக் கதையும் ஞாபகத்துக்கு வந்தது. அவள் மனத்துக்குள் எண்ணிக் கொண்டாள், 'அவன் ஒரு தோட்டக்காரனாக இருக்கலாம். விவசாயியின் மகனாக இருக்கலாம். ஆனால் அவனே என் பேசாக் குறையை நீக்கியவன்' என்று எண்ணமிடலானாள்.

உடனே, தன் தந்தையிடம் ஓடினாள். ''அப்பா! நீங்கள் உங்கள் வார்த்தையைக் காற்றில் பறக்கவிடக் கூடாது. அவன் தோட்டக் காரனாகவோ, விவசாயி மகனாகவோ இருந்தாலும் அவனை நீங்கள் இளவரசனாக்கி விடலாமே! பிறகு அவன் எனக்கு உரியவனாக ஆகிவிடுவானே!'' என்றாள். அதிர்ஷ்டம் அவளுள் இப்படிப் பேசி வேலை செய்தது.

மன்னன் தன் மகளின் பேச்சிலுள்ள நியாயத்தை உணர்ந்து ''உன் இஷ்டப் படியே ஆகட்டும்!'' என்றான்.

சிறைச்சாலையில் விவசாயி மகனின் வாழ்வை முடிக்க ஆயத்தம் செய்து கொண்டிருந்தனர். இந்தத் தருணத்தில் அவனை அரச சேவகன் ஓடி வந்து விடுதலை செய்து அரண்மனைக்கு அழைத்துச் சென்றான். அரசகுமாரி விவசாயி மகனுக்கு மாலையிட்டு மகிழ்ந்தாள். அதிர்ஷ்டம் அபரிமிதமாக வேலை செய்து அவர்களை ஆனந்த லோகத்தில் மிதக்க வைத்தது.

அரண்மனைக் கல்யாணக் கோலத்தில் அதிர்ஷ்டம் மூழ்கியிருக்க, புத்திசாலித்தனம் யார் கண்ணிலும் படாமல் பதுங்கிப் பதுங்கி வெளியேறியது.



# இருளிலிருந்து ஒளிக்கு

குதிரைகளுக்குச் சேணம் தயாரிக்கும் தொழிலாளி அவர். அவருக்கு ஒரு மகன். சதா துருதுருவென்று ஏதாவது விஷமம் செய்து கொண்டிருப்பான். அப்பாவின் ஆயுதங்களை வைத்துக் கொண்டு அவர் செய்வது போலவே வெட்டி ஒட்டித் தைத்துப் பார்ப்பதில் ஒரு குஷி அந்தக் குழந்தைக்கு. அவனுக்கு மூன்று வயதானபோது ஒரு நாள் அப்பா தொழில் செய்யும் அறைக்குள் புகுந்தான். அவர் எங்கோ வெளியே போயிருந்தார். மிகக் கூரான கத்தியைக் கையில் எடுத்தான் பையன். தோல் துண்டை அதனால் நறுக்கி அப்பாவைப் போலவே சின்ன ஒரு சேணம் தயாரிக்க முனைந்தான்.

திடீரென்று குழந்தையின் அலறல் கேட்டது. அவன் அம்மா சமையலறையிலிருந்து ஓடி வந்தாள். அங்கே அவள் கண்ட காட்சி? ஐயோ, பயங்கரம். குழந்தை ஒரு பெஞ்சின் மீது நின்று கொண்டிருந்தான். அவனுடைய ஒரு கண்ணிலிருந்து ரத்தம் கொட்டிக்கொண்டிருந்தது. அப்பாவின் கூரான கத்தி அவன் பிடியிலிருந்து நழுவிக் கண்களுக்குள் பாய்ந்து விட்டது. பதறித் துடித்துப்போன தாயார் குழந்தையை அள்ளிக்கொண்டு டாக்டரிடம் ஓடினாள். காயத்தைச் சோதித்த மருத்துவரின் மனம் வேதனைப்பட்டது. இத்தனை சின்னக் குழந்தைக்கு எத்தனை பெரிய அபாயமான விபத்து? காயம் பட்ட கண்ணில் மருந்து வைத்துக் கட்டிக் குழந்தையின் வலியைக் குறைத்தார். சில வாரங்கள் வரையில் குழந்தை அந்தக் கட்டுடனேயே படுக்கையில் கிடந்தான். எப்போது கண் கட்டை அவிழ்ப்பார்கள் என்று தவித்துப் போனான் குழந்தை. அவனுக்கு இருளைக் கண்டாலே பயம். பிடிக்காது. அவன் தூங்கும் அறையில் ஒரு மெழுகுவர்த்தி எப்போதும் எரிந்து கொண்டிருக்க வேண்டும். 'இனி அந்த ஒளியைக்கூட என்னால் காண முடியாதோ?' இதை நினைக்கவே நடுங்கினான் குழந்தை.

கண் கட்டை அவிழ்க்கும் நாளும் வந்தது. கட்டை அவிழ்த்த டாக்டர் குழந்தையின் காயம் பட்ட கண்ணை நீண்ட நேரம் ஆராய்ந்தார். ''தம்பி! எதையாவது உன்னால் பார்க்க முடிகிறதா, சொல் பார்க்கலாம்'' என்று கேட்டார் டாக்டர்.

குழந்தை வேதனையோடு தலையை அசைத்தான். ''இன்னொரு கண்ணினால்தான் பார்க்க முடிகிறது. அதுவும் மங்கலாகத்தான் தெரிகிறது'' என்றான். கவலையோடும் தவிப்போடும் டாக்டரின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த தாயாரிடம் டாக்டர் உதட்டைப் பிதுக்கினார், வேதனையோடு — இனி ஏதும் செய்வதற்கில்லை என்பதற்கு அடையாளமாக. பொங்கி வரும் அழுகையோடு தன் அருமைக் குழந்தையை அணைத்துக் கொண்டு வீட்டுக்கு வந்தாள் தாயார். தன் குழந்தைக்குக் கண் பார்வை பறிபோய் விட்டது என்பதை எந்தத் தாயாரால்தான் தாங்கிக் கொள்ள முடியும்? ஆனால் அந்தப் பிஞ்சு உள்ளம் உடைந்து போகாதிருக்க அவள் குலைந்து போகாதிருக்க வேண்டுமே?

வீட்டுக்கு வந்த சிறுவன், ''அம்மா! தலையை ரொம்ப வலிக்கிறது. ஏன் வீடெல்லாம் இருட்டாக இருக்கிறது? இரவு வந்து விட்டதா? அப்படியானால் மெழுகுவர்த்தியை ஏற்றுவதுதானே?'' என்றான். பாவம், அன்னை. அவளால் அழவும் முடியவில்லை, அழாதிருக்கவும் முடியவில்லை. இரு கைகளாலும் அந்த இளங் குருத்தைப் போர்த்தி அணைத்துக் கொண்டு உள்ளுக்குள் விம்மினாள். அது நல்ல பட்டப் பகல். ஆனால் அவனுக்கோ அது நள்ளிரவாக இருந்தது. அவள் குழந்தை குருடாகி விட்டான் நிரந்தரமாகவே. காயம் படாத மற்றொரு கண்ணும் பார்வை இழந்து விட்டது. என்ன கொடுமை?

இந்தக் குருட்டுக் குழந்தைதான் உலகில் உள்ள குருடர்களுக்கு மறு வாழ்வு அளிக்கும் மகத்தான ஒரு முறையை உருவாக்கிக் கொடுத்தது. இன்று குருடர்கள் படிக்கும் **'ப்ரேய்லி'** முறையை வகுத்தவர் இந்தக் குழந்தைதான். இவர் பெயர் லூயி ப்ரெய்லி.

பிரான்ஸின் தலைநகரான பாரிஸின் அருகாமையில் கோப்ரே என்றொரு சின்னஞ்சிறு கிராமம். அங்கு குதிரைகளுக்குச் சேணம் தயாரிக்கும் தொழிலாளியின் மகனாக 1809ல் பிறந்து எதிர்



பாராத விதமாகக் கண் பார்வையை இழந்தார் ப்ரெய்லி.

பார்வையை இழந்த ப்ரெய்லி எப்போதும் வீட்டிலேயே அதுவும் தாயாரின் அருகிலேயே இருந்தார். அவரைப் பீதியும் வேதனையும் பற்றிக் கொண்டிருந்தன. ஆகவே ப்ரெய்லியின் தாயார் காரியம் செய்யும் போதும் அவன் காலடியிலேயே இருப்பார். சமையல் அறையை விட்டு வெளி வர மாட்டார். குழந்தைக்கு வயது ஆக ஆக வேதனையும் வளர்ந்தது. மற்றவர்களைப் போல் தன்னால் படிக்க, எழுத, ஓடியாடி விளையாட முடியாது என்ற நினைப்பு அவனுக்குத் தாங்க முடியாததாக இருந்தது. தன் வாழ்க்கை இத்தனை சின்ன வயதில் பட்டென்று ஒரு முடிவுக்கு வந்து விட்டதே என்று ஏங்கலானான். காலம் உருண்டு கொண்டிருந்தது.

மெள்ள மெள்ள அந்த அதிர்ச்சியிலிருந்து விடுபடலானான் ப்ரெய்லி. ஸ்பரிசம், வாசனை ஆகியவைகளின் உதவி கொண்டு வாழ முற்பட்டான். மற்றவர்களைப் போல் உலகின் அன்றாட அற்புதங்களைக் காண முடியா விட்டாலும் அவைகளைப் புரிந்து கொள்ள முடிந்தது அவனால். தகப்பனாரின் தொழிற்சாலையில் காலணிகளைச் செய்யவும் பழகிக் கொண்டான். 1819ல் அவனுக்குப் பத்து வயதான போது பாரிஸுக்குப் போய் அங்கு பிரபலமாக விளங்கிய கண்ணிழந்தோர் கல்விக் கூடமான ரூ ஸெயின்ட் விக்டாரில் கல்வி பயில வேண்டும் என்று விரும்பினான்.

அருமைக் குழந்தையின் ஆசையை உடனே பூர்த்தி செய்தார்கள் பெற்றோர். அந்தப் பள்ளியில் மரக்கட்டையாலான எழுத்துக்களைக் கொண்டு குருட்டுக் குழந்தைகள் அவைகளைத் தடவித் தடவிப் புரிந்து கொள்ள வைத்துப் பாடங்களை நடத்தினார்கள். அந்த முறைக் கல்வியிலேயே சரித்திரம், பூகோளம், கணிதம் ஆகியவைகளில் ப்ரெய்லி உயர்ந்த மதிப்பெண்களை வாங்கிப் பெற்றோரையும் மற்றோரையும் மகிழ்வித்தான். ப்ரெய்லிக்குப் புது வாழ்வு தொடங்கி விட்டது.

குருடர் பள்ளியில் தங்கி வாழும் குழந்தைகளுக்கு இரவு உணவு முன்னதாகவே அளிக்கப்பட்டு விடும். இரவு பகல் எல்லாம் அவர்களுக்கு ஒன்றுதானாலும்கூட அப்படியொரு நியதி. குழந்தைகள் படுக்கைக்குப் போகு முன் ஏதாவது விளையாடிக் கொண்டிருப்பார்கள். அவர்களின் விளையாட்டுக்கள் ஓர் எல்லைக்குட்பட்டவைதான். எதையும் காண முடியாத அந்தக் குழந்தைகள் விரும்பி ஆடுவது 'டாமினோஸ்' என்றொரு ஆட்டம். தந்தத்தினால் ஆன இருபத்தெட்டுக் காய்கள் தட்டையாக — அதில் பல்வேறு எண்ணிக்கையில் குழிகள் காணப்படும். அதைத் தடவி உணர்ந்து கொள்ளலாம். தாயக் காய்களை உருட்டிக் கணக்கிட்டு, இந்த 'டாமினோஸ்' ஆட்டத்தை ஆடுவார்கள்.

**அ**ன்றிரவு அப்படி விளையாடிக் கொண்டிருக்கும்போதுதான் லூயிக்கு அந்த யோசனை பளிச்சிட்டது. லூயியின் தோழன் இரண்டு ஆறு போட்டுத் தன் ஆட்டத்தை முடித்துக் கொண்டான். அடுத்து ஆட வேண்டியது லூயி. அவன் விரல்கள் டாமினோ காய்களைத் தடவி மேஜையின் மீது பரப்பலாயின. ஆனால் ஒரு காயை மேஜை மீது வைக்கத் தவறி விட்டான்.

''சீக்கிரம். உன்னால் முடியாவிட்டால் சொல்லிவிடு. இரவு முழுதும் நாம் விளையாடிக் கொண்டிருக்க முடியாது பார்'' என்றனர் தோழர்கள்.

''கொஞ்சம் இருப்பா'' என்றான் லூயி நிதானமாக. ''எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. இந்த டாமினோக் காய்களிலுள்ள குழிகளை விரல்களின் ஸ்பரிசத்தால் கணக்கிட்டு இந்த

விளையாட்டை நம்மால் ஆட முடியும் போது ஏன் இதே முறையில் நாம் பாடங்களையும் படிக்க முடியாது?'' என்று கேட்டான். மற்றப் பையன்கள் கலகலவென்று நகைத்தார்கள். ''முட்டாள்தனமாக ஏதாவது உளறிக்கொண்டிருக்காதே. பார்வையை இழந்துவிட்டால் அப்புறம் அவ்வளவுதான். மரக் கட்டை எழுத்துக்களைத் தடவித் தடவி இனங் கண்டுகொண்டுதான் நீ தட்டுத் தடுமாறிப் படிக்க வேண்டும். தொல்லையான வேலை. ஆனால் இதை விட்டால் நமக்கு வேறு வழி கிடையாது'' என்றார்கள் லூயியின் சகாக்கள்.

ஆனால் லூயி அவர்களைப்போல ஒரேயடியாக நம்பிக்கை இழந்துவிடவில்லை. ''உண்மைதான். ஆனால் நான் குறிப்பிட்டதை இன்னும் சீராகச் சிந்தித்தால் ஏதாவது புதிய வழி பிறக்கும் என்று தோன்றுகிறது. நான் சரியான பாதையில்தான் சிந்தித்திருக்கிறேன். இதிலிருந்து ஏதாவது மார்க்கம் புலப்படும் என்றும் நம்புகிறேன்'' என்றான் லூயி யோசனையுடன். இதே சிந்தனையாகவே சில நாட்கள் இருந்தான் இளைஞன் லூயி. மறுபடியும் மறுபடியும் அதைப் பற்றியே எண்ணமிடலானான். 'டாமினோ'க் காயைப் போல் எழுத்துக்களை மரப் பலகையில் குடைந்து அதை ஸ்பரிசத்தால் உணர்ந்தறிவது என்பது சிரமமான காரியம்தான். ஆனால் எழுத்துக்களுக்குப் பதிலாக சமதளத்திலிருந்து உயர்ந்து எழும்பியுள்ள புள்ளிகளைப் பயன்படுத்தினால்? ஆங்கில எழுத்துக்கள் ஒவ்வொன்றுக்கும் குறிப்பிட்ட சில புள்ளிகளை உபயோகித்தால்?' வினாக் கேட்டுத் தானே விடையும் கூறிக் கொண்டான் இளைஞனான லூயி. 'நான் வெறும் கனவு காணவில்லை. இந்த முறையில் குருடர்கள் விரைவாகவும் விளக்கமாகவும் கல்வி பயில முடியும்.'



லூயியின் அடுத்த நடவடிக்கை தனது இந்தப் புரட்சிகரமான யோசனையைக் குருட்டுக் குழந்தைகளுக்கான தேசியக் கழகத்தின் நிர்வாக அங்கத்தினர்களின் முன்னிலையில் வைத்ததுதான். அவர்கள் இதை ஆராய்ந்து ஒரு முடிவெடுக்கச் சில காலமாகும் என்பதையும் அவன் அறிந்திருந்தான். அவர்களின் முடிவை ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருந்தான். ஆனால் அவர்களின் முடிவோ அவன் நம்பிக்கையை நாசமாக்குவதாக இருந்தது.

''உன் புதிய முறையில் பல சிக்கல்கள் உள்ளன. அதை நடைமுறையில் கொண்டு வருவது சிரமம். குழந்தைகள் உன் புதிய முறையில் முறையாகப் படிக்க முடியாது. மரக்கட்டை எழுத்துக்களைத் தடவித் தடவிப் படிப்பதே தொடர்ந்து நீடிக்கட்டும். காகிதத்தில் கொப்பளிக்க வைக்கும் புள்ளிகளைப் பற்றிய கனவை விட்டுவிடு'' என்று அறிவுரை வழங்கினார்கள்.

ஆனால் லூயி தன் எண்ணத்தைக் கனவாக ஒதுக்கி விடவில்லை. இப்போது அவன் பிரார்த்தனையின்போது வாத்தியம் (பியானோ) வாசிக்கும் அளவுக்கு உயர்ந்திருந்தான். தான் சிந்தனை செய்த முறையில் தானே செயல்படலானான். ஆறு புள்ளிகள். அதை 63 விதங்களாக அமைத்துக் கொண்டான். ஆங்கில எழுத்தான 'ஏ' (A)க்கு ஒரு புள்ளி ஆறு புள்ளிகளும் சேர்ந்து 'FOR' என்ற வார்த்தையாகும்.

லூயியின் ஆசிரியரில் ஒருவர் இந்த முறையில் ஈடுபாடு காட்டினார். இதற்கு லூயியின் பெயரையே கொடுத்தார் **'ப்ரெய்லி'** முறை என்று. பல வருஷங்கள் நிராகரிப்புக்கும் அவமதிப்புக்கும் ஆட்பட்ட பின் இந்த முறையை ஒரு குறிப்பிட்ட நிலை வரை பயன்படுத்துவதற்கு அங்கீகாரம் அளித்தனர் கழகத்தினர். இதில் லூயிக்கு உதவியும் ஒத்துழைப்பும் நல்கினார் அந்த நல்லவர். ஆனாலும் ப்ரெய்லியின் வாழ்நாளில் இந்த முறை பூரணமாக அங்கீகரிக்கப்படவில்லை. குருடர்கள் பொதுமக்களுக்கு ஒரு தொல்லை என்ற அப்போதைய அதிகாரிகளின் நினைப்பே இதற்குக் காரணம். குருடர்கள் வீதியில் பிச்சை கேட்டுப் பிழைப்பு நடத்துவதைத் தவிர வேறு எதற்கும் ஆசைப்படக் கூடாது என்பது இந்த மகானுபாவர்களின் எண்ணம்.

**பா**ரிஸில் உள்ள ஸெயிண்ட் நிக்கோலஸ் மாதா கோவிலின் வாத்தியம் வாசிப்பவராகவும், குருடர்களின் ஆசிரியராகவும் விளங்கிய லூயி ப்ரெய்லி 1852ம் ஆண்டில் இறந்தார். அப்போது அவருக்கு நாற்பத்துமூன்று வயதுதான். உலகில் நல்லிதயம் படைத்தவர்களெல்லாம் ப்ரெய்லியின் மரணத்துக்கு வருந்

# வேளாண்மை பற்றிய உலகப் பழமொழிகள்

[தொகுப்பு : ரஜன்]

## இந்தியா :

- □ எல்லாத் தொழில்களுக்கும் ஏர்தான் அடிப்படை.
- □ உழவோர் உழைப்பால்தான் உலகோர் பிழைப்பர்.
- □ உழவு காலத்தில் ஊரை விட்டே போய்விட்டால் அறுப்பு காலத்தில் ஆள் தேடவேண்டாம்.
- □ பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும்.

## ரஷ்யா :

- □ ஏர் பிடிப்பவன் ஒருவன், தட்டுடன் நிற்பவர் எழுவர்.
- □ உழவனுக்குத் தீங்கு செய்ய நேரமில்லை.
- □ உழுபவன் இல்லாத நிலம் அனாதைக் குழந்தை.

## ஜெர்மனி :

- □ நிலத்தின் சொந்தக்காரன் நிலத்தில் கவனம் செலுத்துவதே சிறந்த உரம்.
- □ குடியானவன் கனவானாகி விட்டால் கண்ணாடியை மாட்டிக் கொண்டு தான் கலப்பையைப் பார்ப்பான்.

## இங்கிலாந்து :

- □ ஏர் உழ உழ இயந்திரம் மாவு அரைத்துக் கொண்டே இருக்கும்.
- □ நிலத்தை ஒருவன் ஒரு தடவை ஏமாற்றினால் அது அவனை ஒன்பது தடவை ஏமாற்றிவிடும்.

## இதர நாடுகள் :

- □ மண்தான் பொன்னிலும் அருமையானது. — **இத்தாலி**
- □ உங்கள் சந்ததியார்க்குச் சரியான இரண்டு வழிகளைச் சொல்லிக் கொடுங்கள். ஒன்று விவசாயம் மற்றொன்று இலக்கியம். — **சீனா**
- □ தானியத்தை விதைப்பவன் புண்ணியத்தை விதைக்கிறான். — **பாரசீகம்**
- □ வயல்களில் சிரமப் படாதவன் விருந்துகளில் நடனமாட முடியாது. — **பல்கேரியா**



திக் கண்ணீர் விட்டார்கள். ப்ரெய்லியின் மகத்தான காரியத்தை அவருடைய மாணவரும் சீடருமான லண்டன் டாக்டர் ஆர்மிடேஜ் என்பவர் தொடர்ந்து பிரபலமாக்கினார். அவரும் ஒரு குருடர்.

இன்று உலகில் கண்ணிழந்தவர்கள் சங்கீதம், நாடகம், இலக்கியம், கணிதம், பத்திரிகைகள் எதையும் படிக்கலாம். ப்ரெய்லி முறையில் இவைகளெல்லாம் வெளியாகின்றன. குருடர்களுக்காகவே வாராந்திரச் செய்தித்தாள் உள்ளது. தானியங்கு முறையில் குருடர்களுக்காகவே பிரத்தியேகமான முறையில் டைப்ரைட்டிங் யந்திரமும் உள்ளது.

இருளில் வாழும் குருடர்கள் எதையும் அறிந்து கொள்ளும் முறையை வகுத்துக் கொடுத்துள்ள ப்ரெய்லிக்கு எத்தனை கடமைப்பட்டிருக்கிறார்கள்? இன்று ப்ரெய்லி முறையில் படிப்பதும் எழுதுவதும் உலகம் முழுவதும் பரவியுள்ளன. இந்த முறையைப் பிரிட்டன் அங்கீகரித்ததும் சீர்திருத்தப் பட்ட ப்ரெய்லி முறையை 1918ல் அமெரிக்கா ஏற்றுக் கொண்டது.

ப்ரெய்லி புத்தகங்கள், டைப்ரைட்டர்களைத் தவிர ஏராளமான ப்ரெய்லி முறை அட்டைகள் புழக்கத்துக்கு வந்துள்ளன. இதைக் கொண்டு குருடர்கள் கணித இயலை, அல்ஜீப்ரா உட்படக் கற்றுக் கொள்ள முடிகிறது. எத்தகைய அதிசயமான முன்னேற்றம்! ஜான் மில்டன் என்ற மகா கவி ஒரு குருடர். ப்ரெய்லி முறையில் கற்றறிந்தவர். ஹெலன் கெல்லர் பிறவி ஊமை செவிடு குருடு. இவர் தம்மைப் பற்றியும், தம்மைப் போன்றவர்களைப் பற்றியும் ஐந்து புத்தகங்கள் எழுதி வெளியிட்டிருக்கிறார். சர் ஆர்தர் பியர்சன் என்பவர் பார்வை இழந்த ராணுவ வீரர்களுக்காக ஸெயிண்ட் டன்ஸ்டன்ஸ் ஹோம் என்ற பெயரில் விடுதி ஒன்றைத் துவக்கிப் புகழ் பெற்றார். இவரும் ஒரு குருடர்தான். இப்படி ப்ரெய்லியின் முறையினால் கல்வி கற்று வாழ்வு பெற்றுப் புகழ் பெற்றவர்கள் அனேகர். குருடர்களும் வாழ்வில் உயர முடியும் என்ற நம்பிக்கையை உண்டாக்கிய ப்ரெய்லியின் பெருமை சொல்லவும் படுமோ? □




# கட்டையா? மட்டையா?

'கிருஷ்ணவேணி'

கிரிக்கெட் மட்டையைக் கூர்ந்து பார்த்திருக்கிறீர்களா? பிரபலமான இந்த விளையாட்டுக்குப் பயன்படும் 'பாட்'களைத் தயாரிப்பது ஒரு தனிக் கலை. இதற்கு விசேஷமாக 'வில்லோ' என்ற ஒரு வகை மரம்தான் பயன்படுத்தப்படுகிறது. இங்கிலாந்திலுள்ள கேம்பிரிட்ஜ் ஷயர், நார்ஃபோல்க், கிழக்கு சசெக்ஸ் ஆகிய பிரதேசங்களில் கிரிக்கெட் செய்வதற்குப் பயன்படும் வில்லோ மரங்கள் வளர்கின்றன. இந்த மரங்களின் வளர்ச்சி நிபுணர்களின் கண்காணிப்பில் இருக்கும். இம்மரங்களை வளைவு இல்லாமல் நேராக வளரும்படி பார்த்துக் கொள்ளுவார்கள். அடிமரத்தில் எட்டிலிருந்து பத்தடி வரை ஏதாவது குருத்துக்கள் தோன்றினால் உடனுக்குடன் அதை அழித்துவிடுவார்கள். இதனால் மரத்தில் முடிச்சுக்கள் விழுவதில்லை. மரத்துக்குப் பன்னிரண்டு வயது ஆகும்போது அதன் அடிமரத்தின் குறுக்களவு மார்பு அளவு உயரத்தில் பதினாறு அங்குலங்களாக இருக்கும். இதுவே மட்டை தயாரிக்கத் தகுதி பெற்ற நிலை.

வில்லோ மரத்தை வெட்டியதும் இரண்டடி எட்டங்குல நீளத்துக்கு அவைகளைத் துண்டம் போடுவார்கள். இவற்றுக்கு 'ரவுண்ட்ஸ்' என்று பெயர். இந்தத் துண்டங்கள் ஒவ்வொன்றையும் கச்சிதமாக எட்டுப் பாகங்களாகப் பிளப்பார்கள். இவை ஒரு முனையில் கனமாகவும் மறு முனையில் கனம் குறைந்தும் 'ஆப்புக் குச்சிகள் போல் இருக்கும். இவைகளுக்கு 'க்ளெஃப்ட்ஸ்' (Clefts) என்று பெயர். கட்டைகளைப் பிளந்துதான் இத்தகைய க்ளெஃப்ட்ஸ்களைத் தயாரிக்கிறார்கள். ரம்பங் கொண்டு அறுப்பதில்லை. காரணம் மரத்தின் நரம்புக் கோடுகள் பாழ்படாதிருக்கவும் மரத்தின் உறுதி கெடாதிருக்கவுமே இப்படிப் பிளக்கிறார்கள். கிரிக்கெட் மட்டையைக் கூர்ந்து பார்த்தீர்களானால் அடுத்தடுத்து அரை அங்குலத்துக்கு ஒன்றாகப் பல கோடுகள் ஓடுவதைக் காணலாம். இவை மரத்தினுடைய வயதின் வளர்ச்சி ரேகைகள்.

பிளந்த கட்டைகளின் மேல் பட்டையை எடுத்துவிட்டு அவைகளைக் காய விடுவார்கள். ஒரு கன அடிக்கு இருபத்தொரு பவுண்டுகள் வரை அதன் நிறை வரும்படி காய வைப்பார்கள். இதன் பிறகு இதற்கு அழுத்தம் கொடுத்து உறுதிப்படுத்துகிறார்கள். அப்போதுதான் வேகமாகப் பறந்து வரும் பந்தை எதிர்த்துத் தாக்கும் வல்லமை பெற்றதாக விளங்க முடியும். அழுத்தம் கொடுக்க நவீன யந்திரங்களைப் பயன்படுத்துவதில்லை. பழங்கால முறையில் கையால் இயக்கும் யந்திரங்களிலேயே இந்தச் செயலை முடிக்கிறார்கள். ரொம்ப அதிகமும் இல்



லாமல் குறைவுமில்லாத வகையில் 'கம்ப்ரஸ்டு' செய்வதற்கு விசேஷத் திறமையும் அனுபவமும் தேவை.

இந்த க்ளெஃப்ட் இப்போது பண்படாத நிலையில் இருக்கும். இனி இதை 'ட்ரா நைஃப்' என்ற ஆயுதங் கொண்டு செதுக்கிச் சீவுகிறார்கள். இந்த ஆயுதம் இரு பக்கமும் பிடியுடைய பெரிய க்ஷவரக் கத்தி போலிருக்கும். மிகக் கூரான முனையுடையது. இதனால் வில்லோ மரக் கட்டையின் பக்கங்களை இழைப்பார்கள். 'டிஷ்யூ' காகிதம் போல் அத்தனை கவனமாக கண்காணிப்போடு சீவுவார்கள். மட்டையின் குறிப்பிட்ட எடையில் குறைவு ஏற்பட்டுவிடக் கூடாதே? இதனிடையே மட்டையின் கைப்பிடி தயாரிக்கும் வேலையை வேறொருவர் கவனிப்பார். கிழக்கு இந்தியத் தீவுகளில் விளையும் ஒரு வகைப் பிரம்புகளால்தான் கைப்பிடிகள் தயாரிக்கப்படுகின்றன. இந்தப் பிரம்புகளைச் சதுரமான பக்கங்களோடுதான் துண்டு துண்டாக வெட்டுவார்கள். இவைகளுக்கு 'ஸ்லிப்ஸ்' (Slips) என்று பெயர். ஒரு குச்சிக்கும் மற்றொரு குச்சிக்குமிடையே மெல்லிய காகிதம் போன்ற ரப்பரை வைத்துப் பசை கொண்டு ஒட்டுவார்கள். முதல் தரமான கிரிக்கெட் பாட்டின் கைப்பிடியில் பதினாறு ஸ்லிப்ஸ்கள் இப்படி ஒன்று சேர்க்கப்பட்டிருக்கும். இப்படிப் பசை கொண்டு ஒன்று சேர்த்த ஸ்லிப்ஸ்கள் கொண்ட சதுரக் கட்டையை இழைக்கும் நிபுணர் 'ட்ரா நைஃப்' கொண்டு இதை உருளையாகச் சீவுவார். இதன் பிறகு உறுதியான கறுப்பு நிற 'ட்வைன்' நூல் கொண்டு அதை இறுக்கிச் சுற்றுவார்கள்.


இதன் பிறகுதான் கிரிக்கெட் மட்டை அமைப்பில் மிகமிக நளினமான நுண்ணிய காரியம் நடைபெறுகிறது. மட்டையின் மேல் பாகத்தில் 'வி' போன்ற வெட்டு வாயில் கைப்பிடியின் 'பல்'லைப் பதிய வைக்கும் செயல். இங்குதான் கிரிக்கெட் தயாரிக்கும் தொழிலாளியின் கண்களும் கையும் கவனமாகக் காரியம் செய்யும். பார்ப்பவர்களுக்கு மட்டையிலிருந்து கைப்பிடி இயற்கையாக ஒன்றாகவே 'வளர்ந்திருப்பதாகத் தோன்ற வேண்டும். இப்படி இணைப்பதற்கு 'பில்டிங்' என்று பெயர். இணைப்பது என்பது இலேசானதல்ல. வேகம் அதே சமயத்தில் ஒழுங்கு, நிச்சயமான அளவு ஆகியவை தேவை. ஒரே தடவையில் இவை இரண்டும் கச்சிதமாக இணைந்துவிட வேண்டும். தவறினால் மொத்தமும் பாழானதாகக் கருதி ஒதுக்கப்பட்டு விடும். இந்தக் கட்டத்தில் தொழிலாளி செயல் புரியும்போது அவருடைய அனுபவம் மிக்க விரல்கள் பரபரக்கும் வேகத்தையும் கச்சிதமான அளவைகளில் நிச்சயமான பொருத்தங்களையும் பார்ப்பவர்கள் பிரமித்தே போவார்கள்.




கைப்பிடி இணைக்கப்பட்டதும் 'பாட்'டை ஒரு விசேஷ யந்திரத்தில் வைத்து அழுத்துகிறார்கள், பசைகள் சரியானபடி இணைந்து பிடித்துக் கொள்வதற்காக. இந்த முறைக்கு 'க்ராம்பிங்' (Cramping) என்று பெயர்.


மட்டையைக் கட்டியாயிற்று. ஆனால் அது இன்னும் ஆடுவதற்குத் தகுதி பெற்றதாகிவிடவில்லை. உரிய உருவ அமைப்பு, நிறை, எல்லாவற்றுக்கும் மேலாகச் சமநிலை ஆகியவைகளை அதற்கு அளித்தாக வேண்டும். பூர்த்தியான ஒரு கிரிக்கெட் பாட்டை ஆராயுங்கள். அதன் பக்கவாட்டில், அடியில், மேலும் கீழும் எப்படியெல்லாம் அது ஒரே சீராகச் சரிந்து உயர்ந்து வளைந்து விளங்குகிறது? எங்கு கனமாகவும் எங்கு மெலிந்தும் இருக்கிறது என்று பாருங்கள்.

யந்திர மயமான இந்தக் காலத்திலும் மிகச் சிறந்த கிரிக்கெட் மட்டையைக் கைகளால்தான் செய்கிறார்கள். இரண்டு மட்டைகள் ஒன்றேபோல் இருக்காது. ஆனால் அவைகளுக்கிடையேயுள்ள வித்தியாசத்தை நிபுணர்களால்தான் சொல்ல முடியும்.



பலேல பாலு!
கற்பனை : வாண்டு
சித்திரம் : செல்லம்
ஜாலி, ஓ... ஜாலி! வெள்ளிக் கிழமை அரை நாளிலேயே அனுப்பிச்சு விட்டுட்டாங்க. இனிமே திங்கட் கிழமைதான் ஸ்கூல். ஹு... ஹுர்ரே!
HIGH SCHOOL
ஏண்டா, பாலு? முன்னாலேயே வந்துட்டே. நல்லதுதான். உன் சித்தப்பா வாராராம் ஒரு வார லீவிலே. லெட்டர் வந்திருக்கு.
யாரு, ராமு சித்தப்பாவா? பெரிய சாண்டோவாச்சே. ராமமூர்த்தி சாண்டோ, உருளைக் கிழங்கு போண்டோ! வாறுவா... குஷிதான்!
அன்று மாலை
பாலுப் பயலே, எங்கே என் பெட்டியைக் 'காட்ச்' பண்ணிக்கோ...
அம்... மாடி! வாங்க சித்தப்பா...
ஏய், சோனிப் பயலே! இந்த வயசிலே இப்படியாடா இருப்பாங்க? பலமே இல்லையே...
சனிக்கிழமை அதிகாலையில்
என்ன ஆச்சு? ஏன் எழுப்பறீங்க என்னை?
தூங்குமூஞ்சிப் பயலே பாலு, எழுந்திரு, மணி ஐந்தாகப் போகிறது.


இதே மாதிரி இன்னும் பத்துத் தடவை செய்யணும், தெரிஞ்சுதா...? எங்கே... ஒண்... டு...
அம்மாடி... அப்...பா... மூச்சு வாங்குதே...
இன்னும் ஒரு மைல் தான், வீட்டுக் குப் போயிடலாம். இந்த ஓட்டப் பயிற்சி உடம்பைக் கல்லு கணக்கா ஆக்கும்.
இப்போ காலு கல்லாயிட்டுது... அபூர்வமாகக் கிடைத்த சனிக் கிழமை விடுமுறை இப்படியா பாழாகணும்? ராகவா...
ம்... காட்லிவர் ஆயில் குடிச்சாத்தான் உடம்பிலே வலு ஏறும். புரிஞ்சுதா?
காலை ஆகாரத்தின் போது.
பாலுவுக்கு ஒரு தம்ளர் கோதுமைக் கஞ்சி போதும். அப்புத்தான் கபகபன்னு பசி எடுக்கும். உடம்பும் கலகலப்பா இருக்கும்.
வெறும் கஞ்சி மட்டும் தானா? காப்பி கூட இல்லியா?
முன்னெல்லாம் சித்தப்பா சித்தப் பான்னு குதிப்பான் இப்ப ஏன் இப்படி மாறிட்டான்?
ஞாயிற்றுக்கிழமை
அப், அப்...! எழுந்திரப்பா. இது வெறும் தட்டுத்தான். இன்னும் எத்த எத்த மான குத்துக் களைல்லாம் இருக்கு. எழுந் திரு, சொல்றேன்...
திங்கள் காலையில்
அட, பாலுவா? என்ன தம்பி, இப்பத்தானே ஆறு மணி. இத்தனை சீக்கிரமா ஸ்கூலுக்கு வந்துட்டியே? வழக்கமா பெல் அடிச்சப் புறம் ஓடிவரவேணுமே நீ...?
உண்மைதான். ஆனால் என் சித்த பாவோட சித்தி வதையிலிருந்து தப்பணும்னா இங்கே சீக்கிர வர்றதைத் தவி வேறு வழியே இல்லே. கதவைத் திற...


சரியான வேளையில் சரியான வேலை...
அப்பா! இன்னிக்கி எங்க ஸ்கூல்லே கிரிக்கெட் மாட்ச் நடந்தது. என்னை சீக்கிரம் 'அவுட்' ஆக்கிட்டாங்க!
அதெப்படி ராமு?... என்னாச்சு?...
மணி வீசிய 'ஷார்ட் பாலே' நான் 'கட்' செய்யப் போனேன். ஆனா பந்து 'பாட்'டின் விளிம்பிலே பட்டு எழும்பி, நேரே விக்கெட் கீப்பரின் கையிலே சிக்கிடுத்து.
அப்படியா? ஆனால், 'ஷார்ட் பாலே' அடிக்க பலவித 'ஸ்ட்ரோக்'குகள் இருக்கே! உதாரணமாக, 'ஹூக்' அடிக்கலாம். நீ சிறிது வலது பக்கம் நகர்ந்து, பந்து உன்னுடைய இடது பக்கம் உயரே வரும்படி நின்றுகொள். பந்து வந்ததும் 'பாட்'டை நேர்முகம் சுழற்றி அடி...
முழு பலத்துடன் அடித்தால், நீ முழுவதும் திரும்பி, விக்கெட்கீப்பருக்கு நேரிலே வந்துவிடுவாய்!
சரி, மணி எட்டரை ஆகிவிட்டது. போய் படுத்துக்கொள்... பல் துலக்கிவிட்டாயல்லவா?
ஓ! சாப்பிட்டவுடனே வாயைக் கொப்பளித்துவிட்டேன், அப்பா!
அது போதாது ராமு. பற்களைச் சிதைக்கும் உணவுத் துகள்களை நீக்கும் பொருட்டு, இரவும் பகலும் பற்களைத் துலக்க வேண்டும். அதோடு ஈறுகளையும் தேய்க்க வேண்டும் — அவற்றை ஆரோக்கியமாகவும் உறுதியாகவும் வைத்திருக்க இதுவே வழி.
சரி, அப்பா.
வா, நாமிருவரும் போர்ஹேன்ஸ் பற்பசையால் பல் துலக்குவோம்.
FOR THE GUMS
போர்ஹேன்ஸ்
பல் வைத்தியர் ஒருவரால் உருவாக்கப் பட்ட பற்பசை.

'கோகுலத்'தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள் சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக ஆர். அனந்தநாராயணனால் வெளியிடப்பட்டது ● ஆசிரியர்: சதாசிவம்

சந்தா விவரம்: ஒரு வருடம் ரூ. 7-00 ○ ஆறு மாதம் ரூ. 3-50 ○ வெளிநாடுகள் ரூ. 18-00


# நீங்கள் விற்பது எதுவானாலும் சரி, பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் அதை மேலும் நன்கு விற்பனை செய்ய உதவுகிறது.



பிலிப்ஸ் அதிக பட்சமான வாடிக்கையாளர்களின் கவனத்தை உங்கள் கடையின் பக்கம் திருப்புகிறது.



உங்கள் ஜெனரல் ஸ்டோரில் பொருள்களை அதிகக் கவர்ச்சியுடன் காட்சியில் வைக்க உதவுகிறது.



உங்கள் ரெஸ்டாரெண்டில் உள்ள சூழ் நிலையைப் பிரகாசமாக்க உதவுகிறது.

**பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் 100 வாட் பல்பினைப் போல் இருமடங்கு ஒளி தருகிறது. இந்த ஒளி சிறந்ததும், பிரகாசமானதும், கூசாததுமானது, கண்களுக்குக் குளிர்ச்சி தருகிறது. இருந்தும், மின்சாரச் செலவு ஒரு 40 வாட் பல்புக்காகும் அளவேதான்.**

இந்தக்கச்சிதமான பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் இணைப்பு ஒரு பிலிப்ஸ் 40 வாட் ஃப்ளூரோஸெண்ட் பல்ப் கொண்டது. அது சிறந்த, அதிகப்பிரகாசமான ஒளியைத் தருகிறது. பிரபலமான பிலிப்ஸ் பாலியெஸ்டர் பலாஸ்ட், ஸ்டார்ட்டர், ஸ்டார்ட்டர் ஹோல்டர் மற்றும் ஸ்ப்ரிங்க் இணைந்த ரோடார் லாம்ப் ஹோல்டர் இவைகளைக் கொண்டது பிலிப்ஸ் ஸ்ட்ரிப் லைட். பொருத்துவதற்கு எளிதானது. உபயோகத்திற்கு சிக்கனமானது. மேலும் சிறந்த முறையில் விற்பனை செய்ய உதவுகிறது.

**இன்றே பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் பொருத்துங்கள்—உங்கள் வீடு, கடை மற்றும் தொழிற்சாலையில்.**



## பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட்

மூலம் அரைப்பங்கு செலவில் இருபங்கு வெளிச்சம் பெறுங்கள்.

**பிலிப்ஸ்** PHILIPS

பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்

PHL-3539A